Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-22 | 07-12-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -293

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10930) T.P: 024-222 4247



## சண்டையை மீள ஆரம்பிப்பது குறித்து பிரபாகரன் எதுவும் தெரிவித்தாரா?

### மாவீரர் தின உரை குறித்து சந்திரிகா காட்டிய ஆர்வம்

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் உரையைக் கேட்டுவிட்டு கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தை தொடர்பு கொண்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரிடம் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது உரையில் சண்டையை மீள ஆரம்பிக்கப் போவதாகக் கூறியுள்ளாரா?" அப்படியெதுவும் சூசகமான தகவல்கள் எதுவும் அதில் உள்ளதா? - என்று கேட்டுள்ளார். அதற்கு பிரபாகரனின் உரையில் சூசகமாக ஏதாவது கூறப்பட்டதாகவோ அல்லது புலிகள் யுத்தத்திற்கு திட்டமிடுகிறார்களா? என்பது பற்றியோ நோர்வேக்குத் தெரியாது" என்றார்.

இதனையடுத்து அமைச்சர் மங்கள சமரவீரவுடன் கலந்தாலோசித்து விட்டு சூல்ஹெய்மைத் தொலைபேசியில் தொடர்புகொண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சிறில.படையினர் புதிய முகாம்கள் அமைப்பு

திருகோணமலை நகரில் கடந்த மாதம் இறுதியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து சில இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவது என்ற போர் வையில் இவை அமைக்கப்பட்டு வருகின்றன. திருகோணமலை நகர மத்தியில் கோணேசர் ஆலய வீதியில் உயர்ந்தபாடு என அழைக்கப்படும். தமிழ் மக்களின் பூர்வீகக் கரைவலை செய்யும் இடத்தில் சனிக்கிழமை ஒரு தற்காலிக முகாம் அமைக்கப்பட் டுள்ளது. இப்பிரதேசம் 1987ஆம் ஆண்டு தொடக்கம் சிங்கள மக்களால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு சிங்கள பிரதேசமாக மாற்றம் பெற்றுள்ளது.. அதேபோன்று சிறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபு நிபந்தனையோ, இறுதித்தீர்வோ அல்ல!

## நீக்கப்பட வேண்டியவை ஏதுமிருப்பின் பேசித்தீர்க்கலாம் என்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தங்களால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையானது நிபந்த னையோ அல்லது இறுதி முடிவோ அல்ல இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான தமது பிரேரணையில் நிராகரிக்கக் கூடிய அம்சங்கள் இருக்குமானால் அவற்றைப் பேசித் தீர்க்க முடியும் . என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தென்பகுதி மக்களுக்கு விளக்கமளித் துள்ளார்.**

அரச வானொலியின் 'சுபாரதி' விசேட நிகழ்சிக்கு நேற்று அளித்த செவ்வியின் போது இந்த விளக்கத்தை அவர் அளித்துள்ளார். சு.ப.தமிழ்ச்செல்வன் தொடர்ந்து விளக்கமளிக்கையில் கூறியதாவது:-

"வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக சேதமடைந்துள்ள உட்கட்டமைப்பு வசதிகள் புனரமைக்கப்பட்டு, இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமரக் கூடிய நிலைமை போர் நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இதுவரை உருவாக்கப்படவில்லை. இது இயல்பு நிலையை ஏற்படுத்த முக்கிய தடையாக உள்ளது.

'இனப்பிரச்சினைக்கு அரசியல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

-பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு-

## ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் கூட்டாக வாக்களித்தன

புதிய வரவு செலவுத்திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான வரவு செலவு குழுநிலை விவாதத்தில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி அரசிற்கு ஆதரவாக வாக்களித்துள்ளது. அதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் அதற்கு எதிராக வாக்களித்துள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இதற்கெதிராக வாக்களித்துள்ளனர்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான இந்த வாக்கெடுப்பு 118 மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது.

இதன்போது ஆதரவாக 140 வாக்குகளும் எதிராக 22வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

## திருமலை மூதூர் பகுதியில் ஆணின் சடலம் கரையொதுங்கியது

(திருகோணமலை)

மூதூர் உப்பூறல் கிராமத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கரையொதுங்கியது. சுமார் 35 வயது மதிக்கத்தக்க நபரின் சடலத்தின் கை ஒன்று காணப்படவில்லை. ஆடைகளற்ற நிலையில் காணப்பட்ட அச்சடலம் அடையாளம்காணப்படாத நிலையில், பிரேத பரிசோதனை திருகோணமலை மாவட்ட தமிழீழ நீதித்துறை குற்றவியல் நீதியாளர் செல்வி தமிழ்க்கவி முன்னி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறை இளைஞர் கொலைகளை புலிகளே செய்ததாகக் கூறுமாறு நிர்ப்பந்தம்

### -குடும்பத்தினருக்கு பொலிசார் வற்புறுத்து

வல்வெட்டித்துறைப் பகுதியினில் அண்மையில் விளையாடிக்கொண்டிருந்த இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் புலிகளே காரணமென நீதிமன்றில் சாட்சியமளிக்குமாறு உயிரிழந்த இளைஞர்களது குடும்பங்களிற்கு வல்வெட்டித் துறைப்பொலிசார் நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இதுதொடர்பில் உயிரிழந்த இளைஞர்களின் பெற்றோர் விடுதலைப்புலிகளின் கடற்புலிகளது வல்வெட்டித்துறையிலுள்ள அரசியல்துறை அலுவலகத்தின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டுவந்துள்ளனர். இதேவேளை கொலைச்சம்பவத்தினை நேரில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கு மாணவர்களுக்கு சீருடைத்துணி அனுப்புவதில் தாமதம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பாடசாலை மாணவர் களுக்கான சீருடைத்துணிகள் அனுப்புதல் மழை காரணமாகச் சற்றுத் தாமதமடையும் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராசா கூறியுள்ளார்.

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் உள்ள 24 வலயக்கல்விப் பணிமனைகள் சிலவற்றிற்கான சீருடைகள் அனுப்பிவைப்பதில் தாமதம் ஏற்படும் எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து விளக்கமறியல்

அண்மையில் ஆயுதங்களுடன் பாராளுமன்ற வீதியில் கைது செய்யப்பட்ட நான்கு பேரும் பல்வேறு குற்றச்செயலின் அடிப்படையில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட வேண்டுமென கொழும்பு மேலதிக நீதவான் அமாலிரணவீர நேற்று உத்தரவிட்டார். கைது செய்யப்பட்ட நால்வரில் மூவர் தமிழர் ஒருவா சிங்களவராவர். இந்த நிலையில் இவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (32)

## புதுக்குடியிருப்பில் வீட்டினுள் புகுந்து இரு பெண்கள் குத்திக்கொலை

### ஒருவர் குற்றுயிராக மீட்பு

புதுக்குடியிருப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் ஆபத்தான நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரத்தில் ஆறுமுகம் சண்முகராசா என்பவரது வீட்டில் புகுந்த திருடர்கள் சண்முகராசா என்பவரது மனைவி இராசலட்சுமி என்பவரையும் இவரது தாயார் வள்ளியம்மை என்பவரையும் கூரிய ஆயுதம் கொண்டு தாக்கிக் கொலை செய்துள்ளனர்.

இதேவேளை சண்முகராசா என்பவரையும் கடுமையாகத் தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர். இதன் பின்னர் நேற்றுக்காலை அயலவர்கள் சென்று பார்த்தபோது இருவர் பலியாகியும், சண்முகராசா என்பவர் இரத்த வெள்ளத்தில் சோர்வடைந்த நிலையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# மாவீரர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசில் பெற்றோர் விபரம் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மாவீரர்கள் நினைவு நாளை யொட்டி யாழ்ப்பாணம் தனியார் போக்குவரத்துச் சேவை சங்கங் களின் ஒன்றியத்தால் நடாத்தப் பெற்ற கவிதை கட்டுரை,நாடகப் போட்டி மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர் களின் பெயர் விபரங்கள் பின் வருமாறு.

கட்டுரை போட்டி (மாணவர் களுக்கானது) 1ஆம்இடம் செல்வி துளசி கந்தசாமி 30/29 முத்து விநாயகர் வீதி யாழ்ப்பாணம். 2ஆம் இடம் சந்திரகுமார் வசந்த குமார் மத்திய கல்லூரி கிளி நொச்சி,3ஆம் இடம் செல்வி பெருமாள் ஷோபநிதி கூழாங் கூடல் அளவெட்டி, கவிதைப் போட்டி 1ஆம் இடம்:டாக்டர் ச.முருகானந்தம் அரசினர் வைத்தி யசாலை முழங்காவில், 2ஆம் இடம்விபானு மே/பா க.ஆசிவனேஸ் வரன் உடையார் கட்டு முல்லைத் தீவு, 3ஆம் இடம்: கி.இராசுமே/ பா.க. ஆ.சிவனேஸ்வரன் உடை யார்கட்டு முல்லைத் தீவு.

சைக்கிள்ஓட்டப்போட்டி (ஐம்ப துமைல் ஆண்களுக்கானது) 1ஆம் இடம்: க.லோகேஸ்வரன காளி கோவிலடி கொக்குவில் மேற்கு, 2ஆம் இடம்: து.ரஜீம் சாந்தை பண்டத்தரிப்பு,3ஆம்இடம்: ந.ஜெய சுதன் அராலி மேற்கு வட்டுக் கோட்டை.

நாடகப்போட்டி 1 ஆம் இடம்: கோப்பாய். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் நாடகத் தலைப்பு"முகம் தெரியா முகங் கள" 2ஆம் இடம்: திருநகர் கல்வி மறுமலர்சிக்கழகம் நாடகத் தலைப்பு"பிம்பங்கள்"

போட்டிகளில் வெற்றியீட்டிய வன்னிப்பிரதேச போட்டியாளர் களின் பரிசில்களும் சான்றிதழ் களும் கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் ஒப் படைக்கப்பட்டுள்ளது. பரிசிற்குரித் துடையவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் அலுவலக நேரத்தில் நேரில் சமூகம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

## துயர் பகிர்கின்றோம்



தோற்றம்-10.05.1942

மறைவு- 05.12.2004

**சகாதேவன் ஆசிர்வாதம்**

**செல்வபுரம், முல்லைத்தீவு**

இளவேனில் வாணிப பணியாளர், ஆ.சகாயராசா அவர்களின் அன்புத் தந்தையாரான சகோதேவன் ஆசிர்வாதம் அவர்கள் காலம் சென்ற செய்தி கேட்டு மிகுந்த கவலையடைந்தோம். இவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர், போராளிகள்,
பணியாளர்கள்,
இளவேனில் வாணிபம்.

(5340)

## சாரதி அனுமதிப்பத்திரம்

கனரக,சிற்றூர்தி வாகனங்களுக்கான (Heavy duty and lightVehclies licence) ஓடத்தெரிந்தவர்களுக்கு ஒரே நாளில்பெற்றுக்கொள்லாம்.

* வீதி ஒழுங்கு வீதி முறைகள் பற்றி முழு விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
* எழுத்து செய்முறைப் பரீட்சைகளுக்கு துயார்ப்படுத்தப்படும்.
* எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்தினால் அதே நாளில் செய்முறைப் பரீட்சையும் நடைபெறும்.
* இன்றும் நாளையும் [07.12.2004, 08.12.2004.] தொடர்பு கொண்டால் இந்தக் கிழமையிலேயே ஒழுங்கு செய்து தரப்படும்.
* இரு பரீட்சைகளிலும் சித்தி யெய்தினால் பத்து நாட்களில் மூலப்பிரதி (Original computer licence card)பெற்றுக் கொள்ளலாம்.

*எழுத்து செய்முறைப் பரீட்சைகள் யாவும் கொழும்பில் நடைபெறும்

வன்னிதொடர்புக்கு:- க.ருபன்
ஒளியழகு பல்பொருள் வாணிபம்,
சந்தைஉட்புறம்,
விசுவமடு.

(5339)

## மின்சாரம் தடைப்படல்

மின்கம்பியில் உள்ள மின் வயர்களை பண்டல் வயர்களுக்கு மாற்ற வேண்டியதால் A-9 வீதியில் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து கிளிநொச்சி மகாவித்தியாலயம் வரை (விளையாட்டு மைதானப் பக்கம்) இன்று காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை மின்சாரம் தடைப்படும் என மின் சாரசபையினர் வாடிக்கையா ளர்களுக்கு அறிவிக்கின்றனர்.

## சுயமுயற்சி கடன் வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறு வனத்தால் முழங்காவில் பிரதேசத் தில் 25 பயனாளிகளுக்கு சுய முயற்சிக் கடன் உதவி வழங்கப் பட்டது. கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர் வாழ்வு நிறுவனத்தினால் யூ.என். டி.பி நிதியுதவியுடன் கடந்த 03 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முழங்காவில் பிரதேசஇணைப் பாளரின் தலைமையில் கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் முழங்காவில் கிராம சேவை யாளர், அரசியல்துறைப் பொறுப் பாளர், முழங்காவில் பிரதேச பெண்கள் மேம்பாட்டுத் தலைவி மாதர்சங்கத் தலைவி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியதுடன் 25 பயனாளிக ளுக்கு 375000 ரூபா நிதி வழங்கப் பட்டுள்ளது.

## கணினிப் பயிற்சி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி நிறுவனம்பளைப் பகுதியில் இலவச கணினிப்பயிற்சி நெறி ஒன்றினை ஆரம்பித் துள்ளது.

பளையில் அமைந்துள்ள அந் நிறுவனத்தின் பிராந்திய பணி யகத்தில் கடந்த 3 ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் மேற் படி பயிற்சிநெறி ஆரம்பமானது.

இவ் இலவச கணினிப் பயிற்சி நெறியில் அரச உத்தியோகத் தர்கள் 20 பேர் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத் துடன் இப் பயிற்சிநெறி மூன்று மாத காலம் கொண்டதாகும் என்று கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்வி நிறுவன அதிபர் தெரிவித்துள்ளார்.

(கு,ச)

## மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது பற்றி ஆராய்வு

மழைவெள்ளத்தினால் பாதிப்படைந்த பளைப் பிரதேச மக்களுக்கு உதவிவழங்குதல் தொடர்பான கலந்துரையாடலொன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று பளைப் பிரதேச செயலகத்தில் அரச அரசசார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகள் ஒன்று கூடி மழை வெள்ளத்தினால் மிக மோசமாகப் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு உதவிகளைவழங்குவது



தொடர்பாக ஆராய்ந்துள்ளனர். மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற இவ் ஒன்று கூடலில் பளைப் பிரதேச உதவி அரச அதிபர், யு.என். எச்.சி.ஆர். பிரதிநிதிகள், யுனிசெப் பிரதிநிதிகள், சர்வோதயம், ஒக்ஸபாம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு திட்டங்களை வகுத்துள்ளனர். இதேவேளைபளைப் பிரதேசத்தில் பெய்த கடும் மழையினால் மக்களின் குடியிருப்புகள்,பாடசாலைகள் என்பன முற்றாக மூழ்கியதோடு மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் பொது அமைப்புக்களுக்குரிய கட்டடங்களிலும் தஞ்சம்புகுந்துள் ளமையும் வீடுகள் உடைமைகள் என்பனவற்றை இழந்த நிலையில் பலர் துன்பப்பட்டும் வருகின்றனர். (ச)

## விநாயகபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு

மாந்தை கிழக்குப்பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம்கிராம விவசாயிகளுக்கான பயிற்சிவகுப்பு கடந்த 30. ஆம் திகதி காலை 10.30 மணிக்கு விநாயகபுரம் திரையரங்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கிராமசேவையாளர் க. பொன்னுத்துரை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இப்பிரதேசங்களில் உள்ள விவசாயிகளை ஊக்கு விக்கும் நோக்குடன் 45 பயனாளிகளுக்கான விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இதன்போது கருத்துரைகளை முல்லை மாவட்ட பாடவிதான உத்தியோகத்தர் ஜெயராஜா,விவசாய போதனாசிரியர் திருமதி பு.சிவபாலன்,பாண்டியன்குள பிரதேச பொருண்மிய இணைப் பாளர் கி. அமலன் ஆகியோர் வழங்கினர், இந்நிகழ்வில் பயிற்சிவகுப்பும் இடம்பெற்றன. (24)

## சாவு அறிவித்தல்

**கனகசபைசிவபாலன்**

**ஊநிலை நிர்வாக அலுவலர்**
**இலங்கை வங்கி**
**ஊர்காவற்துறை**

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை சிவபாலன் 06.12.2004 திங்கட் கிழமை காலமானார். அன்னார்.அனலைதீவு, காலம் சென்றவர்களான கனசபை விசாலாட்சி தம்பதிகளின் புதல்வரும்,மனோராணியின் அன்புக் கணவரும், கார்த்திகா, சந்துரு, சிந்துஜன் ஆகியோரின் அருமைத் தந்தையும், லோகேஸ்வரனின் [ஆசிரியர் யா.வேலணை மத்தியகல்லூரி] மாமனாரும், மகிஷாவின் பேரனும். பரமேஸ்வரி [இந்தியா], சண்முகநாதன் [கனடா], இரத்தினசபாபதி [கனடா], அமரர் சுப்பிரமணியம், நாகேஸ்வரி, புவனேஸ்வரி [சுவிஸ்], அமரர் விஜயபாலன் ஆகியோரின் சகோதரரும் , அருமைநாயகம் [இந்தியா], மனோன்மணி [கனடா], சாரதாம்பாள்[கனடா], சோதிலிங்கம், புலேந்திரன் [சுவிஸ்], அமரர் ஞானசம்பந்தன், அமரர்சிவசுப்பிரமணியம், சண்முகராஜா [கனடா], திருமதி கனகராசா, சந்திரவதனா, மனோகரன், திருமதி இறைவன் ஆகியோரின் மைத்துனரும், காலம் சென்றவர்களான ஓவசியர் தம்பிராசா மனோன்மணி தம்பதியினரின் மருமகனும் ஆவார். அவரது இறுதிக் கிரியைகள் 08.12.2004 புதன் கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்,
பா.லோகேஸ்வரன் [மருமகன்]
சந்துரு, சிந்துஜா [மக்கள்]

67,அரசடிவீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இல.021-2223440

[சி.11006]

# சவுதியில் அமெ.தூதரகம் மீது தீவிரவாதிகள்திடீர் தாக்குதல்

-5 சவுதி படையினர், இரு தீவிரவாதிகள் பலி -ஊழியர்கள் பலர் காயம்



(றியாத்)

**சவுதி அரேபியாவின் ஜிட்டா நகரிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தீவிரவாதிகள் நேற்று திடீர் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் ஐந்து சவுதி அரேபியப் படையினரும் இருதீவிரவாதிகளும் கொல்லப் பட்டுள்ளனர். ஊழியர்கள் பலரைக் காணவில்லையென்றும் பலர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த தாக்குதல் நடவடிக்கையின்போது முதலில் தீவிரவாதிகள் அலுவலக வாசலில் கார்க்குண்டு ஒன்றை வெடிக்கச் செய்து சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்திய வண்ணம் அலுவலகத திற்குள் நுழைந்தனர். அங்கு சவுதி அரேபியப் படையினருடன் நடைபெற்ற மோதலில் இரு தீவிரவாதிகளும் ஐந்து சவுதிப்படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஊழியர்கள் பலரும், இரு தீவிரவாதிகளும் காயமடைந்துள்ளதாகவும் காயமடைந்த தீவிரவாதிகள் சவுதியரேபியப் படையினரால் கைதுசெய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயம் அடைந்த ஊழியர்களில் நால்வர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

அதேநேரம் இக்கட்டடப் பகுதியில் பாரிய வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணம் உள்ளதாகவும் அங்கிருந்து அம்பியூலன்ஸ் வண்டிகள் செல்வதாகவும் இக்கட்டடத்தை சவுதிஅரேபியப்படையினர் சுற்றிவளைத்துள்ளதாகவும் செய்திக்ள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இக்கட்டடத்திற்குள் நுழைந்த தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் ஊழியர்கள், அதிகாரிகள் 18பேரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளதாகவும், மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.



அமெரிக்க இராணுவத்தினர் வடக்கு ஈராக் நகரான மொசூலில் தீவிரவாதிகளிற்கெதிராக தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டபோது,

# பாதுகாப்பான சூழல் இருந்தால் மட்டுமே ஈராக்கில் தேர்தல் நடத்தப்படும்

-ஐ.நாடுகள் சபை தெரிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் பாதுகாப்பான சூழ்நிலை இருந்தால் மட்டுமே தேர்தல் நடத்தப்படுமென்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஈராக்கில் கடந்த சில நாட்களில் மட்டும் 90 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்றுமுன் தினம் பீஜ் நகரில் நடத்தப்பட்ட கார்க் குண்டு வெடிப்பில் அந்நாட்டின் தேசிய பாதுகாப்புப் படைத்தளபதி ஒருவர் உட்பட 3பேர் உயிரிழந்துள்ளதுடன், 14பேர் காயமடைந்துமுள்ளனர். இதனைவிட கிப்புக் நகரில் உள்ள எண்ணெய் சேமிப்புக் கிடங்கு பயங்கர தீ விபத்துக்குள்ளாகி அப்பகுதியெங்கும் புகை மண்டலமாக மாறியுள்ளது.

இவ்வாறாக நீடித்து வரும் வன்முறைச் சம்பவங்கள் ஈராக்கில் அடுத்த மாதம் 30ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்குப் பெரும் சவாலாக உள்ளது.

இந்நிலையில் ஈராக்-நிலவரம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா.சபையின் பொதுச்செயலாளர் கொபிஅனானின் சிறப்பு ஆலோசகர் "லாக்டர்மீஸ்" அங்கு முழு அளவிலான பாதுகாப்பான சூழ்நிலை இருந்தால் மட்டுமே தேர்தல் நடத்தப்படுமென்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதேவேளை ஈராக்கில் அடுத்த வருடம் சனவரி மாதம் 30ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டுள்ள தேர்தலுக்கான ஆதரவை ஈராக்கிய இடைக்கால சனாதிபதி "ஹார்ஜி-அல்ஜவா" மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.அமெரிக்க சனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளுக்கு முன்பாகக் கருத்து வெளியிட்ட அல்ஜவா தேர்தல் நடத்துவதில் ஏற்படும் தாமதமானது ஈராக்கில் துயரும், ஸ்திரமற்ற நிலையும் அதிகரிக்க வழிகோலும் எனவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஈராக்கில் திட்டமிட்ட வகையில் தேர்தல் நடைபெறும் எனத் தெரிவித்துள்ளார்.

# தலைமைத்தளபதி பதவியைக் கைவிடும்படி சனாதிபதி புஸ் என்னை நிர்ப்பந்திக்கவில்லை

-பாக்.அதிபர் பர்வேஸ் முஷாரப் தெரிவிக்கிறார்

(இஸ்லாமபாத்)

இராணுவத் தலைமைத் தளபதிப் பதவியில் தொடர்ந்து நீடிக்கப் போவதாகவும், இராணுவத் தலைமை தளபதி பதவியைக் கைவிடும்படி அமெரிக்க அதிபர் புஷ்சும் என்னை நிர்ப்பந்திக்கவில்லை என்று பாகிஸ்தான் அதிபர் முஷராப் கூறியுள்ளார். இராணுவப் புரட்சிமூலம் 1999இல் பாகிஸ்தான் அதிபரான பர்வேஸ் முஷராப் அந்நாட்டு இராணுவத் தலைமை தளபதி பதவியையும் வகிக்கிறார். இராணுவத் தளபதி பதவியை இந்தாண்டு இறுதியில் கைவிடுவதாக அவர் உறுதியளித்தார். ஆனால உறுதிமொழியை மீறிவிட்டார்.

சமீபத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதனால் அவரின் பொறுப்பைப் பாகிஸ்தான் தற்காலிக அதிபர் முகமது சூம்ரோ கவனிக்கிறார். முஷராப் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்க இராணுவத் தலைமைப் பதவியில் அவர் நீடிப்பதற்கான மசோதாவில் முகமது சூம்ரோ கையெழுத்திட்டார்.

பாகிஸ்தான் அரசியலமைப்புச் சட்டப்படி தனக்குப் பலன் அளிக்கக் கூடிய மசோதாக்களில் அதிபர் நேரடியாகக் கையெழுத்திட முடியாது. அப்படிச்செய்தால் அவருடைய பதவிக்கும் சிக்கலாகிவிடும். எனவே வெளிநாடு சென்றிருக்கும் போது முகமது சூம்ரோவை மசோதாவில் கையெழுத்திட வைத்து பதவியைத்தக்க வைத்துள்ளார். இதன்மூலம் இப்பதவியைக் கைவிடுவதாக அளித்த உறுதிமொழியை முஷாரப் மீறினார். பாகிஸ்தானின் கொள்கைகளைக் கட்டிக்காக்க அதிபர் இராணுவத் தலைமைப் பதவிகளில் தொடரப் போவதாக 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இதற்கு முன் பதவியில் இருந்தவர்களைவிட இராணுவ உடையில் இருந்தபடியே சனநாயகத்தை ஏற்படுத்தி இருக்கிறேன். ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளேன். பாகிஸ்தானின் கொள்கைகளைக் காக்கவும், அதற்கு உத்தரவாதம் அளிக்கவும் இரு பதவிகளையும் தொடர்ந்து வகிக்கப் போகிறேன் என்று பேட்டியில் முஷாரப் கூறியுள்ளார்.



உக்கிரேனிய எதிர்க்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் விக்ரர் யுஸ்சென்கோ, உக்கிரேனிய பாதிரியார்களுடன் ஒதொடொக்ஸ் தேவாலயத்தில் காணப்படுகின்றனர்.

# பத்திரிகையாளரின் கேள்விக்கு பதிலளிக்காமலிருப்பதே நல்லது

-முஷாரப்பிற்கு புஷ் ஆலோசனை

(வோஷிங்டன்)

பத்திரிகையாளர்கள் கேட்கும் சில கேள்விகளுக்குப் பதில் அளிக்காமல் இருப்பதே நல்லது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிற்கு ஆலோசனை கூறினார்.

வோஷிங்டனில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பின்போது அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவர் பாகிஸ்தானில் பயங்கரவாதப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பினார். அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டாம் என்று அருகில் இருந்த புஷ்சைகைக் காண்பித்தார். அதைத் தவறாகப் புரிந்துகொண்ட முஷாரப் பதில் கூறத் தொடங்கினார். அப்போது இடைமறித்த புஷ் இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுமாறு நான் சைகை காண்பிக்கவில்லை. வேறு பத்திரிகையாளருக்கு வாய்ப்பு அளிக்குமாறு கூறினேன் என்றார். பத்திரிகையாளர்கள் கேட்கும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் சொல்ல வேண்டாம்.அவர்களுக்குப் பதில் சொல்லாமல் இருப்பதே நல்லது என்றார் அவர்.

# சிங்கப்பூரில் கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் எயிட்ஸ் பரிசோதனை

-சிங்கப்பூர் அமைச்சர் அறிவிப்பு

(சிங்கப்பூர்)

"கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் எயிட்ஸ் பரிசோதனை நடத்தப்படும்" என்று சிங்கப்பூர் அமைச்சர் காவ்பூன்வான் அறிவித்து இருக்கிறார்.

எயிட்ஸ் நோய் உலகம் முழுவதும் பரவி வருகிறது. ஆபிரிக்க ஐரோப்பிய நாடுகளில் அதிக அளவில் பரவியுள்ள இந்த நோய், சிங்கப்பூரிலும் அதிகம் பேரைத் தாக்கியுள்ளது. இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் 257 பேருக்கு எயிட்ஸ் நோய் தாக்கியுள்ளது. இதுவரை அந்த நாட்டில் 2 ஆயிரத்து 332 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 874 பேர் இறந்து விட்டனர். இதன் காரணமாக எயிட்ஸ் நோய் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளை அந்தநாட்டு அரசு மேற்கொண்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் எயிட்ஸ் நோய் பரிசோதனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சிங்கப்பூர் நல்வாழ்வுத் துறை அமைச்சர் காவ் பூன் வான் நிருபர்களிடம் கூறியதாவது:-

திருமணம் செய்து கொள்ளப் போகும் மணமக்கள் திருமணத்திற்கு முன்பு எயிட்ஸ் பரிசோதனை செய்து கொள்வதைக் கட்டாயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. எனக்கு 3 மகள்கள் இருக்கிறார்கள். அவர்களது ஆண் சிநேகிதர்கள் எப்படி இருப்பார்கள் என்று யாருக்குத் தெரியும். எனவே ஒரு தந்தையாக இருந்து யோசித்தால் இது தவறு இல்லை என்பது புரியும்.

இதை ஆரோக்கியம் தொடர்பான பிரச்சினையாக மட்டும் எடுத்துக் கொண்டால் இதில் நாம் வெற்றி பெற முடியும்.எனவே ஒழுக்கம் மதம் ஆகியவற்றை இதில் கலக்கக்கூடாது. இவ்வாறு காவ் பூன் வான் கூறினார்.

# இந்தோனேசியாவில் வெள்ளம் பதினொரு பேர் பலி

இந்தோனேசியாவில் பெய்த பலத்த மழையினால் 11பேர் பலியாகியுள்ளனர்.இந்தோனேசியாவில் உள்ள ஜாவாத்தீவில் கடந்த சனிக்கிழமை பலத்த மழை பெய்தது. அதிபர் பசிட்டான் மற்றும் பிளைட்டார் ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடும்மழை மற்றும் வெள்ளத்தால் 11பேர் இப்பகுதியில் பலியாகியுள்ளனர். 3ஆயிரம்பேர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

# மழையினால் பாதிக்கப்பட்ட வீதிகள்





கேரதீவு பூநகரிவீதி



உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் வீதி

-மாங்குளம்- முல்லைத்தீவு

# பிரதான வீதி ஓரத்தில் அமைக்கப்பட்ட கொட்டகைகளை அகற்றக் கோரிக்கை

(முள்ளியவளை)

**முல்லைத்தீவு-மாங்குளம் பிரதான வீதியின் முள்ளியவளைப் பிரதேச பிரதான வீதி ஒதுக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகைகளை அகற்றுமாறு கரைதுறைபற்று பிரதேச சபை விசேட ஆணையாளர் இ.கிருஸ்ணபிள்ளை கேட்டுள்ளார்.**

அவர் விபரமாக இது குறித்துத் தெரிவிக்கையில்; மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் தண்ணீரூற்று முள்ளியவளைப் பகுதி கடைத்தெருவில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. இவ் விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்று வீதி ஒதுக்கத்தில் கொட்டகைகள் அமைக்கப்பட்டிருப்பதாகும். எனவே பொது மக்களினதும் வாகன ஓட்டுநர்களினதும் நன்மை கருதி வீதி ஒதுக்கங்களில் அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகைகள் அகற்றப்படுவது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

எனவே தயவு செய்து தங்களது கடைகளுக்கு முன்பாக வீதி ஒதுக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகைகளை இத்தகவல் கிடைத்து ஒரு வாரத்திற்குள் அகற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும் தவறும் பட்சத்தில் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன் என கரைதுறைபற்று பிரதேசசபை விசேட ஆணையாளர் இ.கிருஸ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

மேற்படி பகுதியில் தொடர் வீதி விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றமையும் சிலசில கொட்டகைகளை தாமாகவே சிலர் அகற்ற வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஆ)

# சனாதிபதியின் தற்போதைய நிலைப்பாட்டை தமிழ் மக்கள் யுத்த அறிவிப்பாகவே கொள்வர்

திருமலை தமிழ்மக்கள் பேரவை தெரிவிப்பு

இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை இல்லை என்னும் சனாதிபதியின் அறிவிப்பு சிறிலங்கா தேசத்தை தூக்கில் போடும் முயற்சி ஆகும். இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். மாவீரர்தின உரையில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் இடைக்கால நிர்வாக சபை யோசனையின் அடிப்படையில் உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறும், அவ்வாறின்றி காலநீடிப்புடன் இழுத்தடிப்பு நடக்குமாயின் எமது போராட்டத்தை முன்னெடுப்பதனை விட வேறுவழி இல்லை எனத் தெரிவித்தார். இந்த உரையானது, சமாதானத்தை விரும்பும் சகல மக்களாலும் வரவேற்கப்பட்டது.

அவரின் அந்த மகத்தான உரையை அரசாங்கத்தின் அங்கமாகிய ஜே.வி.பி. என்னும் குழப்பவாத பேரினவாதிகளும் , ஹெலஉறு'மய போன்ற பௌத்த பேரினவாதிகளும் ஏன் அரசாங்கத்தின் ஒரு பிரிவினரும் கூட திரிபுபடுத்தி தென் இலங்கையின் இனவாத பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். தேசியத்தலைவரின் உரைக்கு அரசாங்கத்தின் பதில் என்னவாக அமையப்போகின்றது என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு சனாதிபதியின் அறிவிப்பானது மிகப்பெரிய மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளது. சனாதிபதி தனது அறிவிப்பினை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். என வேண்டிக்கொள்கின்றோம்.

அவ்வாறு இன்றி சனாதிபதி தற்போதைய நிலைப்பாட்டிலேயே இருப்பாராக இருந்தால் இதனை ஒரு யுத்த அறிவிப்பாக தமிழ் மக்கள் கருதுவார்கள். மீண்டும் தமிழ் மக்கள் மீதுயுத்தம் திணிக்கப்பட்டால் அதனை தமிழீழ தேசியத்தலைவரோடு சேர்ந்து எதிர்கொள்வதனை விட தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை. சனாதிபதி இந்தியா, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியவாதிகளின் துணையுடனும் ஏனைய நாடுகளின் இராணுவ உதவியுடனும் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க நினைத்தால் உண்மையில் அது சிறிலங்கா தேசத்தை தூக்கில்போடும் முயற்சியாகவே அமையும். என்பதனை அரசிற்கும் மதிப்பார்ந்த சனாதிபதிக்கும் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

# பத்திரிகையாளர்கள் எதிர்காலத்தில் புதிய பரிமாணத்தை அடைய வேண்டும்

-கொழும்பு இதழியற் கல்லூரி விரிவுரையாளர் சிவநேயச்செல்வன்

பத்திரிகையாளர்கள் எதிர்காலத்தில் புதிய பரிமாணத்தை அடைய வேண்டுமென கொழும்பு இதழியற்கல்லூரி விரிவுரையாளர் சிவநேயச்செல்வன் தெரிவித்தார்.

வவுனியாஊடகவியலாளர்களுக்கு புகைப்படச் செய்திகள் தொடர்பான கருத்தரங்கு சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் வவுனியா கமநல கேந்திர நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் புகைப்படச் செய்திகள் தொடர்பாக சிறப்புரை ஆற்றும் போதே இலங்கை இதழியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவநேயச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும், தலைநகர் ஊடகவியலாளர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதன் ஓர் அங்கமாகவே இச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றதுஉண்மையான பத்திரிகையாளர்களை,புகைப்படப் பிடிப்பாளர்களை உருவாக்குவதற்கான அடிப்படைத் தளமாகவே இலங்கை இதழியற் கல்லூரி செயற்படுகின்றது. இதனைப் பயன்படுத்தி பத்திரிகையாளர்களாகிய நாம் எதிர்காலத்தில் புதிய பரிணாமத்தை அடைய வேண்டும் என்றார். ஊடகவியலாளர்கள் புகைப்படச் செய்திகளை எவ்வாறு எடுக்க வேண்டுமென ரொயிட்டர் செய்திச்சேவையின் புகைப்படச் செய்தியாளர் அனுருத்த விளக்கமளித்தார். இக் கருத் தரங்கில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், சிங்கள ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர். (10)

-சிதம்பரபுரம் வைத்தியசாலைக்கு-

# கனடாவாழ் தமிழ் உறவுகள் அம்புலன்ஸ் வண்டி அன்பளிப்பு

(வவுனியா செய்தியாளர்)

சிதம்பரபுரம் பிரதேச வைத்தியசாலைக்கு நோயாளர் அம்புலன்ஸ் வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கனடா வாழ் தமிழ் உறவுகளால் இவ் வண்டிஅன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தலைமையில் சிதம்பரபுரம் வைத்தியசாலையில் நடைபெற்றது. வண்டித் திறப்பினை சம்பிரதாய பூர்வமாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் வைத்தியசாலை வைத்தியரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு-கிழக்குமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குமாரவேற்பிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர். (10).

# வவு. நகர்ப்பகுதியில் மீண்டும் களவுகள் அதிகரிப்பு!

வவுனியா நகர்ப் பகுதியிலும் ஏனைய பிரதேசங்களில் மீண்டும் களவுகள் அதிகரித்திருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். கடந்த சனிக்கிழமை வவுனியா குடியிருப்புப் பகுதியில் இரண்டு வீடுகளில் கள்வர் பிரவேசித்து களவு எடுத்துச் சென்று இருப்பதாக பொலிசாரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது இதே போன்று கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர்வைரவர் புளியங்குளம் பகுதியில் மாலை நேரத்தில் தனியாக சென்ற வயோதிபப் பெண ஒருவரின் தங்கச்சங்கிலி களவாடப்பட்டது. இதே போன்று பண்டாரிக் குளம் பகுதியிலும் சங்கிலி களவாடப்பட்டு உள்ளது. அண்மை நாட்களாக களவு தொடர்பான முறைப் பாடுகள் குறைந்து இருந்த போதும் தற்போது மீண்டும் இது தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகப் பொலிசார் தெரிவிக் கின்றனர். வவுனியாவில் நீண்ட நாட்களாக இடம் பெற்ற களவு தொடர்பாக சில நபர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து களவு தொடர்பான முறைபாடு குறைந்திருந்தமையும் தற்போது மீண்டும் களவு கள் அதகரித்து இருப்பதால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (32)

## பொருட்கள்வழங்கல்

மன்னார் மாவட்டத்திலுள்ள முசலிபிரதேச செயலர் பிரிவிலுள்ள சின்னப்புல்லச்சி பொற் கேணிக் கிராமத்தில் மீளக் குடியமர்ந்த 45 குடும்பங்களின் நலன் கருதி அன்றாட பாவனைப் பொருட்களான வாளி, குடம், பிக்கான், கத்தி, பாய் போன்றவற்றை மன்னார் லயன்ஸ்கழகம் வழங்கியது. (18)

# தருமபுரம் அங்காடிப் பகுதியில் நீர் தேங்கியிருப்பதால் சிரமம்

(அலுவலக செய்தியாளர்)

தருமபுரம் அங்காடிப்பகுதியில் மழை நீர் தேங்கி நிற்பதால் காடி வியாபாரிகள், பயன்பாட்டாளாகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி



மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

தருமபுரம் அங்காடிப்பகுதியில் மழை நீர் பாரியளவில் தேங்கி நிற்கின்றது. அங்காடிக்குள் செல்லும் வாயிலில் மற்றும் அங்காடி வளாகத்தில் கட்டடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் நீர் பெருமளவில் தேங்கி நிற்பதால் அங் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் மழை காலத்தில் இவ்வாறு நீர் தேங்கி நிற்பதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

(ச)

பொதுசன நூலகம்

# குருநகர்-திருநகர் குழுக்களுக்கிடையேயான மோதல்

# சிங்கள பேரினவாதிகள்-ஈ.பி.டி.பி யின் கூட்டுச் சதியே

-பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற திருநகர் மற்றும் குருநகர்ப் பகுதி குழுக்களுக்கிடையேயான மோதல் ஈ.பி.டி.பி மற்றும் சிங்களப் பேரினவாதிகளின் திட்டமிட்ட கூட்டுச்சதியாகவே கையாளப்பட்டிருக்கின்றது என தமிழ்க்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் குற்றம் சாட்டியுள்ளார்.**

இவ்விடயத்தில் தேவையில்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகளை சம்பந்தப்படுத்தி மக்களை குழப்பத்துக்குள் தள்ளி தொங்கும் பொறியில் உள்ள சமாதான நடவடிக்கைகளை மேலும் சிதைக்கும் நோக்குடனேயே திட்டமிட்டு துரோகிகளினாலும், எதிரிகளாலும் இச்சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு அரசின் அனுசரணையும் அரசின் ஊடகத்துறையும் துணைபோவது சமாதான நடவடிக்கைகளில் அரசு ஈடுபாடு கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகின்றது. இதய வீணை என்ற பதத்துடன் தமிழ் மக்களுக்கு விரோதமான கருத்துக்களை பரப்பும் ஈ.பி.டி.பியின் விசமப்பிரச்சார நிகழ்ச்சிகளை அரச ஊடகங்கள் பரப்பி இவ்வாறான பிரச்சினைகளை வேறு திசைகளில் நகர்த்தியுள்ளன.

பணத்திற்காய் உரிமைகளைக் காட்டிக்கொடுக்கும் துரோகிகளின் நடவடிக்கைகளுக்கு துணைபோவதுடன் குருநகர், திருநகர் பகுதிகளில் ஏற்பட்ட திட்டமிட்ட பிரச்சினைகளுக்கு இவையே மூலகாரணமாகும். எனவே எதிரிகளின்-துரோகிகளின் உபாயங்களை அறிந்து நாம் அனைவரும் ஒற்றுமையுடனும் பொறுமையுடனும் நின்று விடுதலையின் வாசலைச் சென்றடையவும், திட்டமிட்டு துரோகக் கும்பல்களால் மூட்டப்பட்ட இந்தத் தீயை தேசத்தை நேசிக்கும் எம்முடைய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அணைத்திடவும் சதிராட்டம் போடும் கூட்டத்தை தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் வழியில் நின்று கொட்டத்தை அடக்கிடப் போராடுவோம் என அவர் தெரிவித்தார். கடந்த 12 ஆம் திகதி குருநகர், திருநகர் பகுதிகளுக்குச் சென்று பொதுமக்களையும் கத்தோலிக்க குருமார் மற்றும் கடற்புலிகளுடனும் கலந்துரையாடி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

# யு.என்.எச்.சி.ஆர் இன் நிவாரண விநியோகத்தில்

# முறைகேடென கரவெட்டி மக்கள் புகார்

(கரவெட்டி)

சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்களால் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு யு.என்.எச்.சி ஆர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உணவல்லாத பொருள் விநியோகத்தில் கரவெட்டிப் பகுதியில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக மக்கள் புகார் செய்துள்ளனர்.

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு கிராம சேவகர்களின் தெரிவு அடிப்படையிலேயே இவ்விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இத் தெரிவு நிலையிலேயே பெரும் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கென்றே யு.என்.எச்.சி ஆர் நிறுவனத்தினரால் வரையறை செய்யப்பட்டிருந்தபோதும் கிராமசேவகர்களின குளறுபடி காரணமாக உண்மையிலேயே பாதிக்கப்பட்ட மக்கள் பலர் புறக்கணிக்கப்பட்டு நிரந்தர வாசிகளுக்கு இப்பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. உண்மையில் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் அடைந்துள்ளனர். இந்நிலை தொடர்பாக பாதிப்புக்குள்ளான மக்கள் கரவெட்டி தென் மேற்கு பிரதேச செயலரிடம் புகார் செய்துள்ளனர்.

# பாரஊர்தி-உந்துருளி விபத்தில் இளைஞன் பலி!

(தென்மராட்சி)

சாவகச்சேரி கல்வயலில் பார ஊர்தி - உந்துருளி விபத்தில் உந்துருளியை ஓட்டிவந்த இளைஞர் ஸ்தலத்திலேயே பலி யாகியுள்ளார். மட்டுவில் தெற்கைச் சேர்ந்த வைரமுத்து ரொபின்சன் (வயது- 25) என்ற இளைஞனே பலியானவராகும்.

பார ஊர்தியை ஓட்டிவந்தவர் மதுபோதையில் இருந்ததாகவும் அளவுக்கதிகமான வேகத்தில் ஓட்டி வந்ததாகவும் தெரியவருகிறது. (28)

# உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் நிற்கும் கட்டாக்காலி கால்நடைகளால் பயிர்கள் அழிவு

-முறைப்பாடு செய்தும் பயனில்லையென மக்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் தரித்து நிற்கும் கட்டாக்காலிக் கால்நடைகளால் அப்பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை நிலங்கள் நாசமாக்கப்பட்டு வருவதாக அப்பகுதி விவசாய அமைப்புகள் பலவும் கவலையடைந்துள்ளன.

பருவகால மழையினை நம்பி மேற்கொள்ளப்பட்டுள்ள இந்நெற்பயிர்ச்செய்கை வயல்களினுள் இக்கட்டாக்காலிக் கால்நடைகள் அத்துமீறிப் பிரவேசித்து, பயிர்களை அழித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இதனால் மூளாய், தொல்புரம், பொன்னாலை மற்றும் சுழிபுரம் பகுதிகளைச் சேர்ந்த விளைநிலங்களே பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன.

1995 ஆம் ஆண்டு இப்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளையடுத்து ஏற்பட்ட இடப்பெயர்வினால் விவசாயிகளால் வளர்க்கப்பட்டு வந்த கால்நடைகள் பலவும் அநாதரவாக கைவிடப்பட்டிருந்தன. இவ்வாறு கைவிடப்பட்டிருந்த கால்நடைகளே பல்கிப்பெருகி கட்டாக்காலிகளாக பயிர்களை அழித்து வருகின்றன.

எனினும் இக்கட்டாக்காலிக்கால்நடைகளைப் பிடித்தழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் இவை அப்பகுதியினுள் உள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் தப்பித்துச் சென்று விடுவதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக பொன்னாலை முதல் திருவடி நிலை வரையான பாண்டவெட்டை மற்றும் கல்லை வேம்படிப் பகுதிகளை உள்ளடக்கியுள்ள உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள்ளே இவை பதுங்கிக் கொள்வதாகவும் கூறப்படுகின்றது.

இதனிடையே தற்போது மீளவும் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ள படைத்தரப்பால் அனுமதி வழங்கப்பட்டுள்ள தென்மராட்சி தெற்குப் பகுதியிலும் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்வதாக அப்பகுதி விவசாய அமைப்புக்களும் குற்றஞ்சாட்டியுள்ளன. குறிப்பாக தனங்கிளப்பு மற்றும் மறவன் புலோ பகுதியினுள் அமைந்துள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் ஆயிரத்திற்கும் அதிகமான கட்டாக்காலிக்கால்நடைகள் வசித்துவருவதாகவும் இவைஇரவு வேளைகளில் நெல்வயல்களினுள் புகுந்து பயிர்களை அழித்து நாசமாக்கி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இப்பிரச்சினைகள் தொடர்பில் யாழ்.மாவட்ட இராணுவத் தலைமைக்கும் யாழ்.அரச அதிபரிற்கும் பலமுறைப்பாடுகளைச் செய்திருந்த போதும் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென அப்பகுதி விவசாய அமைப்புகள் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது.

எழுதுமட்டுவாள் வடக்கு மருதங்குளம் பகுதியில் கட்டாக்காலி மாடுகளால் பல ஏக்கர் கணக்கான நெல்வயல்கள் தினந்தோறும் அழிக்கப்பட்டு வருவதாக இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்களுடைய நூற்றுக்கணக்கான மாடுகள் இங்குள்ள சிறிலங்காப் படைகளின் உயர்பாதுகாப்புப் பகுதியில் தங்கி இருந்துகொண்டு இரவுவேளைகளில் கூட்டம் கூட்டமாய் இவ் வயல் நிலங்களில் புகுந்து நெற்பயிர்களை அழித்து வருவதாக இப்பகுதியில் உள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனால், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் என்ன செய்வது என்று தெரியாத நிலையில், இம்மாடுகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (27)

-பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட-

# நிதி ஒதுக்கீட்டின் கீழான வேலைகளை நடைமுறைப்படுத்தக் கோரிக்கை

யாழ். குடாநாட்டில், பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் பாடசாலை வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியானது அரசினால் அங்கீகரிக்கப்பட்டு மாவட்டச் செயலகம் மூலமாக, வலயக் கல்வி அலுவலகங்களுக்கு அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளதால் உடனடியாகத் தங்களுக்குரிய திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு வேலைகளை விரைந்து நடைமுறைப்படுத்தவேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ராவிராஜ் அவர்கள் தெரிவித்துள்ளார். இவ்வேலைத் திட்டங்களை மார்கழிமாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்தத் தவறின் இத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு திட்டங்களுக்கு, மாற்றப்படும் அபாயம் உள்ளதாக அவர் தெரிவித்தார். (28)

# தனியார் கல்வி நிலையத்தில் கலாச்சார சீரழிவு நிகழ்ச்சி

(தென்மராட்சி)

மட்டுவில் வடக்கில் கமலாசினி வித்தியாலயத்திற்கு 200 மீற்றர் தொலைவில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான பிரபலமான கல்வி நிலையத்தில் கடந்த வாரம், ஆண்டு பதினொன்று சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பிரியாவிடை என்ற பெயரில் நடைபெற்ற விருந்துபசார நிகழ்வில் ஆட்டம் பாட்டத்துடன் கலாசார சீரழிவுமிக்க நிகழ்சிகளும், மதுபாவனைகளும் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. இதுகுறித்து அதிர்ச்சியுற்ற பெற்றோர்கள் கல்வி நிலைய நிர்வாகியிடம் இது குறித்து கேட்டபொழுது நடத்த தவறுகளுக்குமன்னிப்புக் கோரியதாகவும் தெரியவருகிறது. இது குறித்து மக்கள் சம்பந்தப்பட்ட கல்வி நிலைய நிர்வாகிக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

# தென்மராட்சியில் மழை வெள்ளத்தை வெளியேற்ற சாவகச்சேரி பிரதேச சபை நடவடிக்கை

தென்மராட்சி பிரதேசத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அன்றாட வாழ்க்கை கவலைக்கிடமாக உள்ள மக்களின் உடனடிப் பிரச்சினையாக உள்ள வெள்ளநீரை வெளியேற்ற அவசர கால நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக பிரதேச சபை செயலாளர் பாலச்சந்தர் தெரிவித்தார் வெள்ளி, சனி,ஞாயிறு தினங்களில் பெய்த மழையால் கொடிகாமம் பிரதேசசபை கட்டடம் மற்றும் இப்பிரதேச பாடசாலைகள், ஒழுங்கைகள், பிரதான போக்குவரத்து சாலைகள், குளங்கள் அனைத்தும் மழை நீரால் நிரம்பி வழிவதால்- இந்த நீரை வெளியேற்ற அவசரகால நடவடிக்கையாகக் கடந்தகாலப் போர் நடவடிக்கையால் முற்று முழுதாய் தூர்ந்து போய் உள்ள வாய்க் கால்கள் ,கால்வாய்கள் அனைத்தும் அவசர கால நடவடிக்கையாக பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் உதவியுடன் மீள் திருத்தம் செய்யப்பட்டுநீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார், தற்பொழுது கெற்பெலி- கேடில்ஸ் குடியிருப்பு ,விடத்தற்பளை,உசன், தவசிகுளம், கச்சாய்,குடமியன்,வரணி,நாவற்காடு. போன்ற பகுதிகளே, இப்பிரதேசத்தில் அதிக அளவு நீரினால்பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது, அத்துடன் தென்மராட்சியில் ஏ-9 வீதியில் பல இடங்களில்மழை வெள்ளம் வீதியின் மேலால் பாய்கிறது. இதனால் வீதிகள் பல இடங்களில் சேதமடைந்துள்ளன. (28)

# செம்மண்தீவு, பன்னவெட்டுவானில் முன்பள்ளிகள் அமைப்பு

(மன்னார்)

மன்னாரில் "சோஆ" என அழைக்கப்படும் அகதிகள் நிவாரணப் பணியகம் கடந்த போர்க் காலங்களில் மோசமாகப்பாதிக்கப்பட்ட செம்மண்தீவு, பன்னவெட்டுவான் கிராமங்களில் முன்பள்ளிகளை நிர்மாணித்து வருகின்றது.

இதற்கென நீர் வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படைவசதிகளைக் கொண்டதாக 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிப்புப் பணி நடைபெற்று வருகிறது.

அடுத்த மாத நடுப்பகுதியளவில் இவ்விரு முன்பள்ளிகளும் திறந்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

### விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மன்னாரில் கிராம மட்ட சுற்றாடல் பேணல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நேற்று மன்னார் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. இதற்கென தெரிவு செய்யப்பட்ட கிராமக் குழுக்கள் இதில் கலந்து கொண்டுள்ளன. இவர்களுக்கான விரிவுரைகளை சுகாதாரத் திணைக்களத்தினர் நடாத்தினர்.

# பாடசாலைகளில் விகிதாசார கோட்டாமுறை பின்பற்றப்படாவிடின் பாரிய விளைவு ஏற்படும்

-ஜாதிகஹெல உறுமய அரசிற்கு எச்சரிக்கை

(கொழும்பு)

1960 ஆம் ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களில் ஒன்றான விகிதாசார கோட்டாமுறை பின்பற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனை மீறப்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஓமல்பே சோபிததேரர் வலியுறுத்தியுள்ளார். விஸாகா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட சனாதிபதி விஸாகா வித்தியாலயம் உட்பட நாட்டின் பாடசாலைகள் கடைப்பிடிக்கும் சமயம் சார்ந்த பாடசாலை அனுமதிமுறை நீக்கப்பட்டு சமயப்பண்புகள் சார்ந்து முன்னுரிமை அளிக்கப்படும் நிலை மாற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்த கருத் திற்கே சோபிததேரர் இவ்வாறு பதிலளித்துள்ளார். இந்த சமயம் சார்ந்த கோட்டா முறை பௌத்த பாடசாலைகளுக்கு மட்டுமல்ல ஏனைய பாடசாலைகளுக்கும் பொருந்தும் எனவும் சனாதிபதியின் கருத்துத் தவறானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐ.தே.க.பா.உ களை விலைக்கு வாங்கும் சந்திரிகாவின் முயற்சியும் ரணிலின் அச்சமும்

சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கம் ஒருவாறு அதன் முதலாவது வரவு செலவுத் திட்ட யோசனைகளை சமர்ப்பித்து கரை சேர்ந்து விட்டது. அதன் சூடு தணியுமுன்பு இன்னு மொரு சவாலை சந்திரிகா ஏற்றுள்ளார். அதாவது இந்த ஆண்டு முடிவடைந்ததும் தனது சனாதிபதிப் பதவிக் காலம் பற்றிய குழப்பத்துக்கு அவர் தீர்வு காணவேண்டியுள்ளது. அதாவது சனாதிபதிப் பதவிக்காலம் முடிவடையுமாயின் தொடர்ந்தும் அரசியலில் தங்கியிருப்பதற்கு அவர் எண்ணியுள்ளதால் அதற்கான குறுக்குவழிகளைக் கண்டறிய வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த சட்டவாளர்களும், ஜே.வி.பி ஆதரவாளர்களும் அவர் இரண்டாவது பதவிககாலம் முடிந்தவுடன் ஓய்வில் செல்வதை விரும்புவதாக இல்லை. அத்துடன் மகிந்த ராஜபக்ஷவும் தனது கட்சியின் கடிவாளத்தை இறுக்கிப் பிடித்திருக்க முனைகிறார். அவர் பல சந்தர்ப்பங்களில் சிறிலங்கா சுதந்திரக் என்பதும் அதன் மூலம் தனது பதவிக்காலம் வரை பிரதமராகவிருந்து பின்னர் தேர்தல் ஒன்றை நடத்தி வென்று நிரந்தரமாக அரசியலில் நீடிப்பது என்பதுமே.

இதற்கு ஆதரவாக அவரது சட்ட வல்லுநர்களும் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டாக ஆதரவு தெரிவிக்கும். அதன் மூலம் பாராளுமன்றில் பெரும்பான்மை கிடைக்குமென சந்திரிகாவை உற்சாகப்படுத்தினர். ஆனால் எதிர்க் கட்சிக் கூட்டணி பலம் பெற்றிருந்தமையால் தொங்கு பாராளுமன்றம் ஏற்படும் சாத்தியம் அன்று தென்பட்டது. அத்துடன் அரசியலமைப்புச் சபையும் கைகூடாமல் போக கூட்டணித் தலைவர்கள் எதிர்க் கட்சியினருக்கு தூண்டில் போட ஆரம்பித்தனர்.

இதன் முதற்படியாக ஜாதிகஹெல உறுமய உறுப்பினர்களிடையே ஏற்பட்ட பிணக்கு காரணமாக அவர்களில் சிலர் சந்திரிகாவின் பக்கம் சேர்ந்தனர். அத்துடன் மேலும் சிலரைத் தனது வலைக்குள் மாட்டி சந்தேகத்தில் கட்சியில் இன்னும் ஒரு உயர் அரசியல்வாதியான மகிந்தசமரசிங்க மூலம் விசாரித்த போது அபேவர்த்தன தான் ஒருபோதும் கட்சியை விட்டு விலகப் போவதில்லை என்று உறுதியளித்துள்ளார். இது இவ்வாறிருக்க கடந்த சில தினங்களுக்கு முன்பு சந்திரிகா எதுவித முன்னறிவிப்புமின்றி பாராளுமன்றில் பிரவேசித்துள்ளார். அவரின் வருகை எதிர்க் கட்சியினரை மட்டுமன்றி ஆளும் கட்சி தரப்பினரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளது. அவர் இதற்கு முன்பு இரு தடவைகள் சபைக்கு சமுகமளித்துள்ளார். ஒன்று அரசியலமைப்பு திருத்த சட்டம் சமர்ப்பிக்க அடுத்தது 2000 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்க.

ஆனால் இவரது வருகை இன்னும் ஒரு சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது. அதாவது அவர் பாராளுமன்ற அதிகாரத்துக்கு வரும் நோக்கிலான தயார்ப்படுத்தலா அல்லது பாராளுமன்ற சூழலை செல்லும் என்பதை ஐ.தே கட்சி அவதானத்துடன் கவனிக்கின்றது. இதனை நிறைவேற்ற ஒரு பொதுத் தேர்தலோ சர்வசன வாக்கெடுப்போ எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அரசியலமைப் பின் 17ஆவது திருத்த சட்டத்தின்படி தேர்தல் ஆணைக் குழுவும் அமைக்கப்படவில்லை. இதற்குக் காரணம் அரசியலமைப்பு சபைக்கும் சந்திரிகாவிற்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் பிணக்காகும். அதாவது ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ரஞ்சித் தீரரத்னாவை ஆணைக்குழுத் தலைவராக நியமிப்பதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையாகும். சந்திரிகாவின் கூற்றுப்படி அவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவரென்பதும் அவர் சுதந்திரமாகச் செயற்பட முடியாதவர் என்பதும் ஆகும். ஆயினும் இதனை தீரரத்ன முற்றிலுமாக நிராகரித்துள்ளார். அவர் பதவியிலிருக்கும் போதோ ஓய்வு பெற்ற பின்போ ஐ.தே. கட்சியுடன் எவ்வித தொடர்புமில்லை என்று கூறியுள்ளார்.

இதனை ரணிலும் உறு திப்படுத்தியுள்ளார். இதனை தீரரத்னாவும் மறுப்புத் தெரிவித்து சந்திரிகாவிற்கு கடிதம் அனுப்பியுள்ளார். ஆயினும் இவ்வாறு தெளிவு படுத்தப்பட்ட போதும் தீரரத்னாவை சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்க





பின்னடிப்பதற்கான காரணம்புரியவில்லை.

கட்சியின் சனாதிபதி வேட்பாளராக் போட்டியிடப் போவதாக தெளிவாக்கியுள்ளார்.அவரது எண்ணம் கைகூடும் போது 50 வருடகால பண்டாரநாயக்க பரம்பரையின் ஆட்சி அதிகாரம் முடிவுக்கு வந்துவிடும்.

இது இவ்வாறாக சனாதிபதி சந்திரிகா நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை நீக்கிவிட்டு பிரதமரின் அதிகாரத்தின் கீழ் ஆட்சியைக் கொண்டு வாவும் அதன் மூலம் தான் பிரதமர் பதவியை ஏற்றுத் தொடர்ந்து அரசியலில் நீடிக்கும் திட்டத்தையும் கொண்டிருக்கிறார். அதற்கேற்றவாறு அவர் அரசியலமைப்பை மாற்றி அரசியலமைப்பு சபை ஒன்றை உருவாக்குவதெனவும் தேர்தல் காலத்தில் வாக்குறுதி (தேர்தல் விஞ்ஞாபனம்) அளித்துள்ளார். அரசியலமைப்பு சபை உருவாக்கும் திட்டத்தினை அறிவித்து தேர்தலில் வென்று வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகவும் அவர் கூறினார். ஆனால் அவரின் உண்மையான திட்டமாக இருந்தது. நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை ஒழிப்பது விடும் முயற்சியில் சந்திரிகா கூட்டணி முயன்றது. அந்தத் திட்டத்தில் வெற்றிகண்டதும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீது சந்திரிகா கண் வைத்தார். அந்தக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி சிலரைத் தன்பக்கம் இணைத்தார். அதன் பின்பு ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் மீது அவரது கவனம் திரும்பியது.

அது ரணிலின் தலைமைத்துவம் மீது ஏனைய உறுப்பினர்களை சந்தேகங் கொள்ளச் செய்து குழப்பத்தை தூண்டியதாகும். இதன் பயனாக ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஹோஹித போகொல்லாகமவும் சந்திரிகா பக்கம் இணைந்து விட்டார். இதனால் மேலும் பலர் சந்திரிகாவுடன் இணைந்து விடுவர் என்ற பயம் ஐ.தே. கட்சிக்கு உருவானது. அதனால் கட்சிக்குள் பலத்த சந்தேகங்களும் எழுந்தன. உடனடியாக தலைவர் ரணிலுடன் கலந்தாலோசிக்கவும் ஆரம்பித்தனர்.

ஆயினும் இன்னும் ஒரு அதிரடி நடவடிக்கையாக ரணில் விக்கிரமசிங்க தென் பகுதியில் பிரதான கட்சியமைப்பாளரான லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனவின் இடத்துக்கு ரொனிடிமெல்லை நியமித்தார். ஆனால் இதற்கெல்லாம் காரணமீ... கட்சி உறுப்பினர்கள் சந்திரிகாவின் பக்கம் திரும்பும் ரணிலின் அச்சம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை காரணமாக அபேவர்த்தனவும் கட்சிதாவுவார் என்ற பழக்கப்படுத்திக்கொள்ள எடுத்த முயற்சியா என்பதே.

அண்மைக் காலத்தில் தமது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் அதிகரிப்பு காரணமாக அவர் முன்பு திட்ட மிட்ட அரசியலமைப்புச் சபையை உருவாக்கி தேர்தல் வாக் குறுதியை நிறைவேற்றும் நம்பிக்கையுடன் இருக்கலாம். அந்த வாக்குறுதிப்படி நிறை வேற்று அதிகார முறையை நீக்கி விடவும் அரசி யலமைப்பில் மாற்றம் கொண்டு வரவும் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவும் திட்டமிட்டிருக்கலாம். ஆயினும் அதனை வருட முடிவிற்குள் நிறை வேற்ற அவருக்கு மூன்றிலிரண்டு பெருன்பான்மை உட னடியாக கிடைப்பது கடினமே.

கேசர அபேவர்த்தன (டெய்லிமிரர் ஆங்கில நாளிதழ்)
தமிழில் :-வடிவேல்

அரசின் திட்டம் எதுவாகிலும் சிறுபான்மைக் கட்சிகள் அந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பையே தெரிவிக்கும் அந்த நடவடிக்கை பிரச்சினையைத் தீர்ப்பதை விடுத்து மேலும் அதிகரிக்கவே செய்யும்.

ஐ.தே கட்சியும் இவ்வாறான ஈடுபாட்டிற்கு தனது எதிர்ப்பைக் காட்டி வருவதுடன் எச் சரிக்கையையும் விடுத்துள்ளது. அரசாங்கம் எவ்வித தடைகளும் இன்றி இந்த நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுத்துச்

இதற்கிடையில் மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பாகவும் ஆறுமுகம் தொண்டமானுக்கு சந்திரிகா கூட்டணிக்கும் இடையில் பிணக்குகள் தீர்க்கப்படாதுள்ளது. இதன் காரணமாக தொண்டமானின் இ.தொ காங்கிரசும் அரசுக்கு நிரந்தரமாக ஆதரவை வழங்கும் என்பதும் சந்தேகமாகியுள்ள நிலையில் சந்திரிகா போதிய பெரும்பான்மையைப் பெற்று தனது திட்டத்தை நிறைவேற்றி விடுவாரா?. ரணிலின் அச்சம் நிரந்தரமாகி ஐ.தே.க அரசு ஆட்சி அதிகாரக் கனவைச் சிதைக்குமா. என்பது சில காலம் செல்ல வெளிச்சத்திற்கு வந்துவிடும்.

## மாவீரர் நாள் நிகழ்வுகளில்








### அவுஸ்திரேலியா மெல்போர்னில்







அமெரிக்க கலிபோர்னியா மாநிலம் சான்பிரான்சிக்கோ நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில்...



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்



## பலத்துக்கான பலப்பரீட்சை

உலகில் ஆண்டுதோறும் கால்பந்து போட்டிகளுக்கு அடுத்த படியாக அதிக நாட்கள் நடைபெறும் போட்டிகளில் கிரிக்கெட் போட்டிகளே முன்னணி வகிக்கின்றது.

இதில் தெற்காசிய நாடுகள் அதிக ஆர்வம் காட்டுகின்ற போதும் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் முன்னணியில் திகழ்கின்றன. இவ் அணிகளுக்கு தெற்காசியாவின் இந்தியா, பாகிஸ்தான், சிறிலங்கா அணிகள் சவால் மிகு அணிகளாக திகழ்வதுடன் இவற்றுக்கிடையிலான போட்டி பரபரப்பை ஏற்படுத்துவதுடன் ரசிகர்களால் விரும்பி ரசிக்கும் போட்டியாகவும் அமைந்து விடுகிறது.

இந்த வகையில் மேற்போன்ற நாடுகள் ஆசியாக்கண்டத்தில் விளையாட ஆர்வம் காட்டுவதும் உண்டு.

அவுஸ்திரேலிய அணியைத் தவிர ஏனைய அணிகளுக்கு இந்தியா, பாகிஸ்தான், சிறிலங்கா அணிகளை அவர்களது சொந்த மண்ணில் வீழ்த்துவது என்பது இப்போதும் கடினமான ஒன்றாகவே இருக்கின்றது.

இது இவ் அணிகளை தரவரிசையில் பின்னுக்குத் தள்ளுவதுடன் போட்டிகள் சவால் மிகு தொடராகவும் அமைந்துவிடுகின்றது.

இந்த வகையில் ஒருநாள் போட்டியில் இரண்டாவது இடத்தில் உள்ள சிறிலங்கா அணி நியூசிலாந்துக்கான சுற்றுலாவை இம்மாதம் மேற்கொண்டு விளையாடவுள்ளது.

இது மூன்றாவது இடத்தில் உள்ள நியூசிலாந்து அணிக்கு இரண்டாவது இடத்தைப் பிடிப்பதற்கு வாய்ப்பாக அமையுமா? அன்றி சிறிலங்கா அணி அசத்தலான வெற்றிகளைப் பெறுமா? என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

ஒரு நாள் போட்டியைப் பொறுத்து சிறிலங்கா அணியை விட நியூசிலாந்து அணி பலமானது. அதிக சகல துறை ஆட்டக்காரர்களைக் கொண்டுள்ளதுடன் தாயக மண்ணில் சிறப்பாக ஆடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறிலங்கா அணி பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் சிறப்பான வெற்றியைப் பெற்ற நிலையில் எதிர்கொள்ளவுள்ள முதலாவது போட்டி நியூசிலாந்துத் தொடர் என்பதால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தக் கூடும். ஆனால் நியூசிலாந்து ஆடுகளங்களில் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்துவார்களா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

மொத்தத்தில் இப்போட்டித் தொடர் பலத்துக்கான பலப்பரீட்சையாகவே அமையும்.

---

## ஒரு மனம் வேண்டும்...

அவுஸ்திரேலிய அணியின் இலகுவான வெற்றிகள் ஏனைய அணிகளுக்கு மனக்கிலேசத்தை ஏற்படுத்தி விடுகின்றது. என்ற நியூசிலாந்து அணித்தலைவர் பிளெமிங்கின் கருத்து அவுஸ்திரேலிய அணி வெல்லப்பட முடியாத அணி என்பதை அவர் மனந்திறந்து கூறவைத்துள்ளது.



உலக கிரிக்கெட் அரங்கில் ஒரு அணியின் தலைவர் இது போன்ற கருத்துக்களை விடுவதென்பது அபூர்வமானதே. ஏனெனில் அணித் தலைவராக இருந்து கொண்டு மேற்போன்ற கருத்துக்களை தெரிவித்துவிட்டால் அவரில் இயலாமையை வெளிப்படுத்துவதாக அக்கருத்து அமைத்து விடுவதுடன் அணியின் ஏனைய வீரர்களையும் அது பலவீனமாக்கிவிடும் எனவும் எண்ணக்கூடும்.

அதற்காக ஏனைய அணித் தலைவர்களே சவால்மிக அறிவிப்புக்களை வெளியிடுவார்கள். பிளெமிங்கோ வித்தியசமான அறிக்கையைவிட்டு அனைவரையும் கவர்ந்துள்ளார்.

மோசமான தோல்வியின் கட்டத்தில் இருக்கும் அணியின் தலைவர் ஒருவர் வேதனையின் கட்டத்தில் அணிக்கு சாதகமாக கருத்து தெரிவிப்பதே வழமை ஆனால் பிளெமிங் அவுஸ்திரேலிய வீரர்கள் அனைவரும் திறமையானவர்கள் எமக்கு எதிராக மூன்று டெனிஸ் லில்லி ஒரு ஷேன்வோர்ன் பந்து வீசுவது போன்று இருந்தது என்று கூறியதுடன் அவ்அணியை தொடர்ச்சியான வீழ்ச்சிக்கு உட்படுத்துவதென்பது தற்போது இருக்கும் வீரர்கள் கிளண்டிப் போனாலே இயலும் என்றும் கூறியுள்ளார்.

இது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாகவே இருக்கின்ற போதும் அதை மனந்திறந்து பிளெமிங் வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில் தற்போது நடைபெற்றுவரும் ஒரு நாள் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் அதே அவுஸ்திரேலிய அணியை நியூசிலாந்து அணி தோற்கடித்து தனது பலத்தையும் நிரூபித்துள்ளது.

இது எதிர் பாராமல் பெறப்பட்ட வெற்றி என்று கூறிவிட முடியாது. நியூசிலாந்தின் திறமைக்கு கிடைத்த வெற்றியே, ஒருநாள் போட்டி என்பது எந்தவொரு அணிக்கும் எதிர்பாராத தோல்வியை ஏற்படுத்தி விடும் என்பது இயல்பே. அது போன்று ஒரு தோல்வியாக அவுஸ்திரேலியாவின் தோல்வியை எடுத்துக் கொண்டாலும் ஆச்சரியமில்லை. ஏனெனில் முன்னணி பந்துவீச்சாளர்களான கிளெஸ்பி, மெக்ராத் ஒருநாள் அணியில் இடம் பெறவில்லை. இது ஒருவேளை நியூசிலாந்து அணிக்கு சாதகமாக அமைந்திருக்கலாம். ஆனால் அவுஸ்திரேலிய அணியை பொறுத்து எதிர்பாராத தோல்வி ஒன்று ஏற்படும் போது அதனை மாற்றிஅமைத்து அடுத்துவரும் போட்டிகளை தமக்கு சாதகமாக்குவதில் கைதேர்ந்தவர்கள் யாராலும் மறுக்க முடியாது.

---



## அவருக்கு நிகர் அவரே

கிரிக்கெட் தெரிந்தவர்களுக்கு ஜோன்டி ரோட்ஸ் என்ற பெயரை அதிகம் அறிமுகம் செய்யத் தேவையில்லை.

தென்னாபிரிக்க வீரரான இவர் தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். விளையாடுகின்ற காலத்திலும் சரி தற்போதும் சரி இவருக்கு நிகரான களத்தடுப்பாளரை கிரிக்கெட் உலகம் இன்றும் வரை பெறவில்லை. ஜோன்டி ரோட்சுக்கு நிகர் ஜோன்டி ரோட்சே தான்.

புலியை போன்று தாவிப் பாய்ந்து பந்துகளை லாவகமாக தடுத்து நிறுத்தும் ரோட்ஸ் பக்கத்து மைதானத்துக்கே தாவிவிடுவாரோ என்ற அளவுக்கு இருக்கும்.

இவர் விளையாடிய காலத்தில் டேர்பன் நகரில் நடந்த ஒருநாள் போட்டியில் திறமையாக பிடியெடுத்து சச்சின் டெண்டுல்கரை ஆட்டமிழக்கச் செய்ததே தனது கிரிக்கெட் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வென்கிறார்.



ஆனாலும் அது அன்று சர்ச்சையை ஏற்படுத்தியது. தரையில் பட்டுவந்த பந்தையே ரோட்ஸ் பிடி எடுத்துவிட்டு ஆட்டமிழப்பு கோரியதாக, அது ஒரு சம்பவம் தவிர வேறு எந்த பிரச்சினையும் இவரது கிரிக்கெட் வாழ்க்கையில் இல்லை.

ஆயினும் அதனை இன்றுவரை மறுக்கும் ரோட்ஸ் அது மிகவும் அற்புதமான பிடி எடுப்பு என்கிறார்.

உலகில் அதிசிறந்த கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவே அவர்களே கிரிக்கெட்டை மிகச் சரியாக ஆடுகின்றனர் எனக் கூறும் அவர்.

கிரிக்கெட்டில் அனுபவித்து செய்யக் கூடியது களத்தடுப்பே பிடி எடுக்கும் வாய்ப்புக்களை நழுவவிடுவது தவறல்ல நானும் அது போன்ற தவறுகளை பலமுறை செய்துள்ளேன். களத்தடுப்பில் இருக்கும் போது உற்சாகமாக இருக்க வேண்டும் உற்சாகம் மட்டும் குறையக் கூடாது.

துடுப்பாட்ட வீரர் அடிக்கும் ஒவ்வொரு பந்தும் எனது பக்கம் தான் வரவேண்டும் என்று நான் விரும்புவேன். அப்படி நினைக்கும் போது கூடுதல் கவனமும் தடுப்பாற்றலும் நமக்கு கிடைக்கும். அதுவே எனது திறமைக்கும் காரணமாக இருந்தது. கூடுதலாக கவர் திசையில் களத்தடுப்பில் ஈடுபடும் ரோட்ஸ் அபாரமாக செயற்படுவதுடன் ஆட்டம் முழுவதும் துடிப்புடனேயே செயற்படுவார்.

இன்று ரோட்சை போன்று அவுஸ்திரேலியாவின் கிளார்க இந்தியாவின் முகமட் கைப் போன்றவர்கள் செயற்படுகின்றமையே காண முடிகின்ற போதும் எவ்வளவு காலத்துக்கு செயற்படுவார்கள். அப்படிச் செய்தாலும் ரோட்சுக் நிகராக இடத்தை பெறுவார்களா என்பது கேள்வியே.

தற்போது தொழில் நிறுவனம் ஒன்றில் முக்கிய பொறுப்பில் இருக்கும் ரோட்ஸ் கிரிக்கெட் உலகில் வீழ்ந்து போய்க்கிடக்கும். அணி ஒன்றிற்கு பயிற்சியாளராகி தன்போன்ற களத்தடுப்பாளர்களை உருவாக்கினால் மேலும் மங்காப் புகழ் பெறுவார்.

---

முத்தையா முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சு முறை உலக கிரிக்கெட் களத்தையே மாற்றியமைத்துள்ளது என்றால் மிகையாகாது. முரளிதரன்தனது திறமையை வெளிப்படுத்தி உலகில் அதி கூடிய டெஸ்ட் விக்கெட்டுக்களைப் பெற்ற முதலாவது வீரராவார். இவரின் பந்துவீச்சு முறை குற்றங்காணப்பட்டு பெரும் சர்சைக்குள்ளாகியிருந்தது. இந்த குற்றச்சாட்டானது பந்துவீசும் போது வீசி எறிதல் என்னும் விதிகளில் குறிப்பிட்ட வீத அளவுக்கும் மேலாக மணிக்கட்டைச் சுழற்றியிருக்கிறார் என்பதுமே குற்றச் சாட்டுகளாகும். ஆயினும் இதுபற்றிச் சிந்திப்போமாயின் இப் பந்து வீச்சு சுமார் 140 வருடங்களுக்கு முன் பழமை வாய்ந்ததாகும் முதன்முதலாக 1 8 6 3 ஆ ம ஆண்டு இங்கிலாந்து மர்லிபோன் கழகம் OVERARM முறைபந்து வீச்சுக்கு அனுமதியளித்தது அன்று ச ே ர , கென்ட் அணி களுக்கிடையிலான போட்டியில் எட்கா வில்ஷர் என்பவரின் பந்து வீச்சை யோன் வில்லைட் குறை கூறினார். அதுவே சர்ச்சையின் ஆரம் பமாகும்.



## சொன்னாலும் வெட்கமடா...

ஆயினும்அதிகாரபூர்வ டெஸ்ட் போட்டி ஒன்று 1897 இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற போது அவுஸ்திரேலிய பந்து வீச்சாளரான ஆர்னஸ்ட் ஜோன்ஸின் பந்து வீச்சில் குற்றம் காணப்பட்டது. அதன் பின்பு (55வருடங்களுக்குப் பின்) இந்தியா- மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முக்கோணப் போட்டி நடைபெற்ற போது இங்கிலாந்தின் டொனிலெக்சின் பந்து வீச்சில் குறை கூறப்பட்டது.

அந்தவகையில் 1960ஆம் ஆண்டு தென்ஆபிரிக்க வீரர் ஜேப்கிறித் பாகிஸ்தான், ஹசித்அஷான் (1960) அவுஸ்திரேலியாவின் இயான்மெகிப் (1963) இந்தியா வின் சீட்அபிஅலி (1967) இங்கிலாந்தின் டேவிட் கவர் (1982) சிம்பாப்வே ஹென்றி ஒலங்கா (1986) சிறிலங்காவின் முரளிதரன் (1995) சிம்பாப்வேயின் பிரான்பிளவர் (2000) என்போரும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகினர். ஆயினும் முரளிதரனின் பந்து வீச்சு முறை மட்டுமே பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. முதன் முதல் 1995இல் அவுஸ்திரேலியாவுடனான போட்டியிலும் 1999இல் இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டியின் போது இரண்டாவது முறையாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.இதன்போது அப்போதைய அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்கவும் நடுவருடன் வாக்குவாதப் பட்டதும் குறிப்பிடத்தக்கது. இவ் விவகாரம் சர்வதேச கிரிக்கெட் சபை வரை சென்று தற்போது அதற்கு அங்கீகாரம் கிடைத்தது. ஆயினும்அதற்கிடையில் முரளியின் பந்து வீச்சுக்குத்தடையும் கொ[illegible]டு வரப்பட்டது. ஆனால் மேற்படி குற்றத்தை மேலும் பலர் செய்கிறார்கள் என்பதை முரளி சுட்டிக்காட்டியுள்ள நிலையில் அவரின் வாய்க்கும் பூட்டுப் போடப்பட்டுள்ளது. எனவே முரளி இப்போது பேசாத ஊமையாகிவிட்டார்.

வடிவேல்

# ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆண்டாக
# 2005 ஆம் ஆண்டு பிரகடனம்

**-தேசபிரேமி இயக்கம் நடவடிக்கை**

2005ஆவது வருடத்தை மீண்டும் ஆக்கிரமிப்புக்கு எதிரான வருடமாக பிரகடனப்படுத்த தேசபிரேமி இயக்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறிலங்காவை ஐரோப்பியர்கள் ஆக்கிரமித்த 500 ஆவது வருடம் என்பதால் 2005 ஐ இவ்வாறு பிரகடனப்படுத்தும் அவசியம் இருப்பதாக இயக்கம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் அடுத்தவருடத்தில் பல ஆக்கிரமிப்பு எதிர்ப்புக் கண்டனங்களையும் பிரச்சாரங்களையும் தேச பிரேமி இயக்கம் மேற்கொள்ள விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கூட்டங்களினது நோக்கம் தேசப்பற்றை வளர்ப்பதும் வெளிநாட்டு தலையீடுகளை தவிர்ப்பதும் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நடவடிக்கைகளுக்கான நிதியை திரட்டும் பணி தொடர்வதாகவும் உதவியளிக்க விரும்புவோர் வங்கிக் கணக்கில் செலுத்தலாம் என்றும் இவ்இயக்கம் கோரியுள்ளது.

**– மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டிய –**

# 6184 கோடி ரூபாவைச் செலுத்த இலங்கை மின்சாரசபை மறுப்பு

மத்திய வங்கியினால் எரிபொருள் மானியம் ரத்துச்செய்யப்பட்டமையால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மத்தியவங்கிக்குச் செலுத்தவேண்டிய வற்வரி, உற்பத்திவரி 6184 கோடி ரூபாவை மத்தியவங்கிக்குச் செலுத்துவதை நிறுத்தப்போவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எரிபொருள் மானியம் நிறுத்தியது சம்பந்தமாகக் கடந்த செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் பி.டி.ஜயசுந்தர அறிவித்த கடிதத்திற்குப் பதிலாக இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக காபிய மெதகம அறிவித்துள்ளார்.

# திருமலை வன்செயல்களில் ஜே.வி.பி பின்னணியில்; சனாதிபதிக்கு படை அதிகாரிகள் எடுத்துரைப்பு

*–அரசின் பங்காளிகளாக இருப்பதால் நடவடிக்கை எடுப்பது கடினம் எனவும் தெரிவிப்பு*

திருகோணமலையில் மாவீரர் எழுச்சி நாட்களில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களில் ஜே.வி.பியினருக்கு இருந்த தொடர்பு குறித்து படை அதிகாரிகள் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குத் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் ஒரு உயரதிகாரி இது தொடர்பாக சனாதிபதி ஏன் ஜே.வி.பியினருடன் பேசக்கூடாது எனக் கேட்டுள்ளதாகவும் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று தெரிவிக்கிறது. இதற்குப்பதிலளித்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி யினரைச் சந்திப்பது குறித்து தான் கருத்திலெடுப்பதில்லை எனத் தெரிவித்துள்ளார். இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது.

திருகோணமலையில் இடம் பெற்ற சம்பவங்களை அடுத்து திருகோணமலையின் பாதுகாப்புத் தொடர்பாக சனாதிபதி ஆராய்ந் தார். பாதுகாப்பு உயரதிகாரிகள் திருகோணமலை நிலைமை மோசமாக உள்ளதாகவும், பதட்டத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் சனாதிபதிக்கு அறிவித்துள்ளார். அவர்கள் மேலும் இப்பதட்ட நிலை தொடர்ந்தால் விடுதலைப் புலிகள் தாம் விரும்புவதை அடைவர் எனவும் எச்சரித்துள்ளனர். ஜே.வி.பி சிங்கள மக்கள் மன எழுச்சிகளைத் தூண்டுவதில் மிகவும் தீவிரமாக உள்ள தாகவும் அவர்கள் அறிவித்தனர்.

ஜே.வி.பி அரசாங்கத்தில் ஒரு அங்கமாக இருப்பதால் இப்பிரச்சினையைக் கையாள்வது தமக்கு கடினமாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டனர். இக்கலந்துரையாடலுக்கு வருகை தந்த பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளில் ஒருவர் நீங்கள் ஜே.வி.பி தலைவர்களைக் கூப்பிட்டு ஏன் எச்சரிக்கக் கூடாது என சனாதிபதியை கேட்டுள்ளார். அதற்கு சனாதிபதி ஓர் எதிர்பார்க்காத பதிலாக நான் அவர்களைச் சந்திப்பதில்லை எனக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; காலையில் இருந்து மாலை வரை அவர்கள்என்னைச் சந்திக்க வேண்டும் எனக் கேட்டுக்கடிதங்கள் அனுபுகின்றனர்.ஆனால் வெளியே சென்று முற்றாக வித்தியாசமாகச் சொல்கிறார்கள் நான் அவர்களைச சந்திப்பதைக் கருத்திலெடுப்பதில்லை எனவும் குறிப்பிட்டார்.

## "வற்வரி" குறைக்கப்பட்டும் விலை குறையவில்லை

வரவு-செலவுத்திட்டத்தில் பால்மா ஏனைய உணவுப் பொருட்களுக்கான "வற்வரி" 10 சதவீதத்தினால் குறைக்கப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ள போதிலும் இது வரை இப்பொருள்களின் விலைகள் குறையவில்லை. இது குறித்து கவனத்தில் எடுத்துள்ள அரசாங்கம், இதனைக் குறைப்பதற்கு உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தெரிவித்துள்ளது.

# ஆளுநர்களுக்கு ஓய்வூதியமா? தேவையற்றது என்கிறது ஜே.வி.பி

நாட்டில் சகல மாகாணங்களிலும் தற்பொழுது கடமை புரியும் மாகாண ஆளுநர்களுக்கு அவர்கள் ஓய்வு பெற்றதும் ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளுக்கு ஜே.வி.பி முற்றாக எதிர்ப்பு தெரிவித்துள்ளது. தற்பொழுது ஆளுநர்களாக பிரபுக்களும்,ஓய்வு பெற்றுள்ள சிரேஷ்ட அதிகாரிகளும் கடமை புரிகின்ற படியால் இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதை எதிர்க்கின்றோம் என ஜே.வி.பி தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா அதிகரிப்பு

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாதாந்தம் ரூபா 10 ஆயிரம் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இந்தத் தகவலை பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மில்ரொய் பெர்னாண்டோ வெளியிட்டுள்ளார்.

இந்த மேலதிக கொடுப்பனவு காரணமாக தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரயில் மற்றும் பஸ் இலவச போக்குவரத்து சலுகை நீக்கப்படுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்போது ரயில் மற்றும் பஸ்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலவச அனுமதிகளை பயன்படுத்துவதில்லை. தமது சொந்த வாகனங்களையே பயன்படுத்தி வருகின்றார்கள். இதற்காக தீர்வையற்ற வாகனம் வழங்கப்பட்டுள்ளதோடு, மாதாந்தம் ரூபா 12 ஆயிரம் முதல் 22 ஆயிரம் வரை எரிபொருள் செலவும் வழங்கப்படுகின்றது. ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் அதிகரிக்க தாங்கள் தீர்மானித்திருந்த போதிலும், ஜே.வி.பி காட்டிய எதிர்ப்புக் காரணமாக இது கைவிடப்பட்டது. இருப்பினும் அரசாங்கம் மறைமுகமான முறையில் இந்த புதிய நடைமுறை மூலம் மாதாந்தம் ரூபா 10 ஆயிரத்தினால் அவர்களது கொடுப்பனவை அதிகரித்துள்ளது. (32)

# திறந்த பாடசாலைமுறை அறிமுகப்படுத்தத்திட்டம்

திறந்த பாடசாலை முறை ஒன்று இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அடுத்த வருடம் முதல் இது நடைமுறைப்படுத்தப்படும் என தேசியக் கல்வி நிறுவக பணிப்பாளர் கலாநிதி ஜெகத் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

இந்த கல்வி முறையின் மூலம் எவரும் பயன்பெறக்கூடியதாக இருக்கும். இதற்கு பாடசாலை தேவையில்லை வீட்டில் இருந்தே பயில முடியும்.

இலங்கையில் இது புதிய முறையாக இருந்தாலும் இந்தியா உட்பட ஏனைய நாடுகளில் இது பழைய முறையாகும்.

இந்தியாவில் மாத்திரம் இலட்சக்கணக்கானோர் தம்மை பதிவு செய்து கொண்டுள்ளனர் எனத் தெரிவித்தார். இந்தக் கல்வி முறைக்கு கல்வித் தராதரம் அல்லது தகைமை என்ற விடயம் அவசியமில்லை எனத் தெரிவித்தார். (32)

**–இலங்கை சேமலாப நிதிப்பிரிவில்–**

# உரிமை கோரப்படாத சேமலாப நிதி 500 கோடிக்கு மேல் தேக்கம்

சேமலாபநிதிக்கு உரிமை கோராதவர்களின் பெருமளவு நிதி சேமலாப நிதிப் பிரிவில் தேங்கி இருப்பதாக தொழிலாளர் மேம்பாட்டு வெளிநாட்டு தொழிலாளர் நலன்காப்பு பகுதியின் நிரந்தர செயலாளரும் தொழில் ஆணையாளருமான மகிந்த மடிகஹேவ தெரிவித்துள்ளார்.

சுமார் 500 கோடிரூபாவிற்கும் மேலதிகமான நிதி தேங்கி இருப்பதாகவும் சேமலாப நிதிக்குரியவர் இறந்தமை மற்றும் வெளிநாடுகளுக்கு சென்றமைபோன்ற காரணங்களினால் நிதியைப் பெற முடியாமல் உள்ளனர் எனவும் அதனுடன் 470000 பேருக்கு மேல் சேமலாப நிதி பெறுவதற்கு தகுதி உடையவர்கள் உள்ளனர் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். தற்போது சேமலாப நிதியில் 33900 கோடி ரூபாய் நிதிப் பிரிவில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# துப்பாக்கிக் குண்டுகளுக்கு அஞ்சி நீதிபதிகள் மௌனமாகிவிடக்கூடாது

**-நீதித்துறை அமைச்சர் ஜோன் செனவிரத்ன**

(கொழும்பு)

துப்பாக்கிக்குண்டுகளுக்கு அஞ்சி நீதிபதிகள் மௌனமாகிவிடக்கூடாது என நீதித்துறை அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு தாஜ் சமுத்திரா விடுதியில் நடைபெற்ற நீதிபதிகளுக்கான இரண்டு நாள் கருத்தரங்கில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நீதிபதிகள் தங்கள் கடமைகளை சுதந்திரமாக செய்வதை மேலும் தடுக்க முயற்சி செய்வோர் கடுமையான தண்டனைக்குள்ளாவர்.

நீதிபதிகள் துணிவுடன் செயற்படுவது அவர்களின் பொறுப்பு துப்பாக்கிக் குண்டுகளுக்கு அஞ்சி மௌனமாகிவிடக்கூடாது என்றும் கூறியுள்ளார்.

அண்மையில் மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் சுட்டுக் கொல்லப்பட்டதும். இக்கொலையில் பிரதி அமைச்சர் ஒருவருக்குத் தொடர்பிருப்பதாக குற்றம்சாட்டப்படுவதும் அத்துடன் கொலைச் சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவருக்கும் பல சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பிருப்பதாக தகவல்கள் வெளி வந்திருப்பதும் தெரிந்ததே.


## B(–)ve குருதிவகை சிறுநீரகம் அவசரம் தேவை

அராலிவடக்கு, யாழ்ப்பாணத்தை நிரந்தர முகவரியாகக் கொண்ட தற்போது சுவிஸ்லாண்டில் வசித்து வரும் திரு.செல்லத்துரை சிவபாதம், வயது 52 என்பவருக்கு அவசர "சிறுநீரகமாற்று" சத்திரசிகிச்சை செய்வதற்கு B(–)ve சிறுநீரகம் தேவைப்படுகின்றது. சன்மானம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி-
திருமதி.க.இராசரத்தினம்,
மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.
T.P.021-228 5810

(சி 10650)



## கரைவலை தொழில் உரிமையாளர்களுக்கான பொதுக் கூட்டம்

முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் ஆளுகைக்குட்பட்ட நாயாறு தொடக்கம் நல்ல தண்ணீர்தொடுவாய் வரையான பகுதியில் கரைவலைத் தொழில் செய்யும் கரைவலைத்தொழில் உரிமையாளர்களுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 2004.12.12 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சமாசத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவிருப்பதால் இக்கூட்டத்தில் கரைவலைத் தொழில் உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு:- சொந்தமாக கரைவலைத் தொழில் வைத்திருக்கும் முல்லை மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும்.

"நன்றி"

அ.மரியராசா,
தலைவர்,
முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்,
முல்லைத்தீவு.

(சி10524)

# கடற்பரப்பில் தோன்றும் அச்சுறுத்தலை எதிர்கொள்ள விசேட கொமாண்டோப் படையணியை அமைக்க இந்.அரசு முடிவு

(புதுடில்லி)

**கடற்பரப்பில் ஊடுருவல்களை தடுத்துநிறுத்துவதற்கென கடற்படைவிசேட கொமாண்டோப் படையணியொன்றை உருவாக்கும் பணியில் இந்திய அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

இந்தியாவின் 90வீதமான வெளிநாட்டுவர்த்தக நடவடிக்கைகள் கடல்வழியாகவே மேற்கொள்ளப்பட்டுவருவதால் கடல் வழிப்போக்குவரத்துக்கான பாதுகாப்பு என்பது மிகவும் முக்கியமானதென்று கருதியே இந்தப்படையணியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடற்பரப்புக்களில் தோன்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளக் கூடிய விசேட கடல் கொமாண்டோப படையணியொன்றை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கடற்படையணியினை உருவாக்குவதற்கான பயிற்சிக் கல்லூரி ஆரம்பத்தில் இந்தியாவின் கோவாபகுதியில் அமைக்கப்படவுள்ளதாகவும் 2006ஆம் ஆண்டளவில் இந்தக் கல்லூரி கேரளாவிற்கு மாற்றப்படவுள்ளதாகவும் இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சர்வதேச அளவில் உருவாக்கப் பட்டு வரும் பலகடற்படை கொமோண்டோ அணிகளின் தரத்திற்கு ஈடான ஒரு கடற் கொமோண்டோப் படையணியினை உருவாக்க வேண்டும் என்று பிரதானமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்படுகின்றது.



பெங்களூரில் உள்ள இன்போஸிஸ் நிறுவனத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்ட ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடன் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் தயாநிதி மாறன், இன்போஸிஸ் தலைவர் நாராயண மூர்த்தி.

# புதிய தொழில்நுட்பத்தைக் காண இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து செயற்பட வேண்டும்

## – ரஷ்ய அதிபர் தெரிவிப்பு

(பெங்களூர்)

புதிய தொழில் நுட்பத்திற்காக இந்தியா, ரஷ்யாவும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் கூறினார். பெங்களூருக்கு இரண்டு நாள் சுற்றுப் பயணமாக கடந்த சனிக்கிழமை மாலை பெங்களூர் வந்த புட்டின் மாலையில் இந்தியத் தொழில் கூட்டமைப்பு மற்றும் இந்தியத் தொழில் வர்த்தக சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். ஞாயிற்றுக்கிழமை காலை இன்போஸிஸ் நிறுவனத்தைப் பார்வையிட்டு இன்போஸிஸ் அதிகாரிகளிடமும், ஊழியர்களிடமும் அவர் பேசினார் பின்னர்அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:-

தகவல் தொழில்நுட்பத்தில் இந்தியா சிறந்து விளங்குகின்றது. குறிப்பாக பெங்களூர் இத் துறையில் முன்னணியில் உள்ளது என்றார் அவர் முன்னதாக இன்போஸிஸ் ஊழியர்கள் மத்தியில் அவர் பேசியதாவது;புதிய தொழில் நுட்பத்தைக் காண இந்தியாவும், ரஷ்யாவும் இணைந்து செயலாற்ற வேண்டும் இதன் மூலம் இரு நாடுகளிடையே நல்லுறவு மேம்படும். தகவல் தொழில்நுட்பத் துறைபோலவே மற்ற சில துறைகளிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். பல்வேறு துறைகளில் இரு நாடுகளின் நல்லுறவு அதிகரிக்க வேண்டும் என்றார். இன்போஸிஸ் வந்த புட்டினை அந் நிறுவனத் தலைவர் என்.ஆர். நாராயணமூர்த்தி வரவேற்று அழைத்துச் சென்றார். புட்டினுடன் மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் தயாநிதிமாறனும் வந்தார். பின்னர் அவர் விமானத் தயாரிப்பு நிறுவனமான இந்துஸ்தான் எரோ நாட்டிக்ஸ் நிறுவனத்திற்கு ( எச்.ஏ.எல் )சென்றார். அங்கு இலகுரக உலங்குவானூர்தி, நடுத்தர ஜெட் விமானம், இலகுரகப் போர் விமானம் ஆகியவற்றைப் புட்டின் பார்வையிட்டார். இரண்டு நாள் சுற்றுப் பயணத்தை முடித்த பின்னர் அவர் மாஸ்கோவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

# இந்திய உச்ச நீதிமன்றின் பரபரப்பான தீர்ப்பு

(புதுடில்லி)

மனைவி மன உளைச்சலை ஏற்படுத்தினால் விவாகரத்துப் பெறும் உரிமை கணவனுக்கு உண்டு என்று இந்திய உச்ச நீதிமன்றம் பரபரப்பான தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது. ஆந்திராவைச்சேர்ந்த டாக்டர் ஒருவர் சீக்கிய பெண் டாக்டர் ஒருவரை 19 ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்திருந்தார்.

தனதுமனைவி தன்னை ஓயாமல் குறைகூறி அவமானப் படுத்துவதாகவும் இதனால் தனக்குப் பெரும் மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது. எனவே மனைவியிடமிருந்து தனக்குவிவகாரத்துப் பெற்றுத்தருமாறு கோரி உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்கே உச்சநீதிமன்று மேற்படி தீர்ப்பை அளித்துள்ளது. அத்துடன் கணவனைக் குறைகூறி தொடர்ந்து அவமானப்படுத்துவது கொடூரமான குற்றம்என்று பெண் நீதிபதி தலைமையிலான மூன்று நீதிபதிகள் குழுவினர் கருத்துக் கூறியுள்ளனர்.

# காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல் 15இந்.படையினர் பலி ஆயுதங்களும் பறிப்பு

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் சனிக்கிழமை இரவில் சாலையில் பதிக்கப்பட்டிருந்த குழாய்க்குள் வைக்கப்பட்டிருந்த நாட்டு வெடிகுண்டு வெடித்ததில் இராணுவ ரோந்து வாகனத்தில் சென்ற மேஜர் உட்பட 9 படையினருடன் சிறப்புப் பொலிஸ் அதிகாரியும் சிவிலியன் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

எல்லைப்பகுதியில் ஊடுருவும் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தும் பணியை முடித்துக்கொண்டு சனிக்கிழமை இரவில் முகாமிற்கு வாகனத்தில் திரும்பியபோது இந்தச் சம்பவம் நடந்தது.

ஸ்ரீநகரிலிருந்து சுமார் 40 கி.மீ.தொலைவில் நைய்னா-படாபோரா என்ற இடத்தில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்துள்ளது. மேஜர் லலித், சிறப்புப் பொலிஸ் அதிகாரி இம்தியாஸ் அகமது, வாகனத்தின் ஓட்டுநர் உட்பட 10 வீரர்கள் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர். பாகிஸ்தான் ஆதரவு ஹிஜ்புல் முஜாஹிதீன் அமைப்பு இந்தத் தாக்குதல் சம்பவத்திற்குப் பொறுப்பேற்றுள்ளது.

குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்களிடமிருந்து 6 ஏ.கே. ரகத் துப்பாக்கிகளையும், மூன்று வயர்லெஸ் செட்களையும் தமது இயக்கத்தினர் எடுத்துச்சென்றுவிட்டதாவும் அந்தத் தீவிரவாத இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வாரத்தில் நடந்த 2ஆவது பெரிய சம்பவம் இதுவாகும். கடந்த வியாழக்கிழமை இரவில் தீவிரவாதிகளின் தற்கொலைப்படைத் தாக்குதலில் 4 மத்திய ஆயுத பொலிஸ் படையினர் உயிரிழந்தது தெரிந்ததே.

இதேவேளை அனந்த்நாக் மாவட்டத்தில் பான் என்ற கிராமத்தில் சனிக்கிழமை தீவிரவாதிக[illegible]தேடுதல் வேட்டையில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது 3 தீவிரவாதிக[illegible] ஒரு மசூதிக்குள் சென்று பதுங்கிக்கொண்டனர். இரவில் நடந்த சண்டையில் ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும் இரண்டு பேர் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் சுட்டுக்கொல்லப்பட்டதாக இராணுவஅதிகாரிஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீநகர் புறநகர்ப்பகுதியில் மத்திய எல்லைப் பாதுகாப்புப்படை வீரர்களின் முகாம் உள்ளது. இந்த முகாம்மீது தீவிரவாதிகள் எறிகுண்டு வீசித்தாக்கினர். இதில் யாரும் காயமடையவில்லை. ஆனால் அப்பகுதியில் பெரும்பீதி ஏற்பட்டது. குண்டுவீச்சு நடந்த இடத் திற்கு சுமார்300 மீற்றர் தொலைவில் உள்ள இடத்தில்தான் தேசியமாநாட்டு கட்சித்தலைவர்கள் மற்றும் காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லா மற்றும் அக் கட்சியின் எம்.எல்.ஏக்கள்மறைந்த ஷேக் முகமது அப்துல்லாவின் நினைவிடத்தில் அவரது 99ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு அஞ்சலி செலுத்தினர்.

# ஊழல் மந்திரிகளை புறக்கணிக்கலாமா? பா.ஜ கூட்டணித் தலைவர்கள் கூடி ஆராய்வர்

(புதுடில்லி)

பாராளுமன்றத்தில் ஊழல் மந்திரிகளை புறக்கணிக்கலாமா? என்பது பற்றி பாரதிய ஜனதாக் கூட்டணித் தலைவர்கள் ஒன்று கூடி முடிவெடுக்கவுள்ளனர். ஊழல் மந்திரிகள் ஊழல் புகார் கூறப்பட்டவர்களும் பல்வேறு வழக்குகளில் தொடர்புடையவர்களும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மந்திரி சபையில் இடம்பெற்றிருக்கின்றார்கள். மேலும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மந்திரி சபையில் இடம்பெற்றுள்ள லல்லுப் பிரசாத் யாதவ், ராம் விலாஸ் , பஸ்வான் ஆகியோர் பீகார் சட்டசபைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஒருவரையொருவர் தாக்கிப் பேசி வருகின்றார்கள். இதற்கு பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணி எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. “ஒரே அணியில் ஒத்த கருத்து இல்லாத கட்சிகள் இடம்பெறலாமா? இது பிரதமரின் செயலற்ற தன்மையைக் காட்டுகின்றது'' என்று குற்றம் சாட்டியிருக்கின்றது.

இந்தநிலையில் பாராளுமன்றக் கூட்டத்தில் ஊழல். மந்திரிகளையும் ஒற்றுமையில்லாத மந்திரிகளையும் கண்டித்து அவர்களைப் புறக்கணிக்கலாமா? என்று தேசிய சனநாயக கூட்டணி ஆலோசித்து வருகின்றது. இதுபற்றி முடிவெடுப்பதற்காக தேசிய சனநாயக கூட்டணித்தலைவர்கள் டில்லியில் கூடுகின்றார்கள். இந்தத் தலைவர்களின் கூட்டம் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் வீட்டில் நடைபெறுகின்றது. கூட்டத்தில் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல்.கே அத்வானி தேசிய சனநாயகக் கூட்டணி ஒருங்கிணைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ஐக்கிய ஜனதா தளத் தலைவர் நிதீஷ் குமார், திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி மற்றும் தலைவர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

# ஜெயேந்திரரின் பிரச்சினையில் பிரதமர் உடனடியாகத் தலையிட வேண்டும்

## -மூத்த வழக்கறிஞர் கிருஷ்ணமணி கோரிக்கை

(புதுடில்லி)

ஜெயேந்திரருக்கு சிறையில் மூன்று தினங்களாக மருந்துகள் வழங்கப்படவில்லை... வேலூர் சிறையிலேயே அவர் கொல்லப்படுவார் என்ற அச்சம் நிலவுகிறது.எனவே அவரது உயிரைக் காப்பாற்ற குடியரசுத்தலைவர் உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட வேண்டும் என்று கோரி உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் எம்.என்.கிருஷ்ணமணி தந்தி அனுப்பியுள்ளார்.

காஞ்சி சங்கர மடத்தின் உத்தரவின் பேரில் குடியரசுத்தலைவருக்கு இந்த மனுவை நேற்று முன்தினம் மாலை அனுப்பி வைத்தார்.

சிறையில் ஜெயேந்திரர் முறையாக நடத்தப்படவில்லை. கடந்த மூன்று தினங்களாக அவருக்கு மருந்துகள் வழங்கப்படவில்லை. குளுகோமா மற்றும் கடுமையான சர்க்கரை வியாதியால் அவர் பாதிக்கப்பட்டுள்ளார். பிரபல கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் பத்ரிநாத், குளுகோமா வியாதிக்காக ஜெயேந்திரருக்கு சில மருந்துகளை பரிந்துரை செய்துள்ளார். அந்த மருந்துகள் அவருக்கு வழங்கப்படவில்லை

ஜெயேந்திரரின் தனி மருத்துவர் ராமச்சந்திரன், ரத்த அழுத்தப் பரிசோதனைக் கருவி, சர்க்கரை அளவைக் கண்டறியும் கருவி போன்றவற்றை சிறைக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.ஜெயேந்திரர் மிகவும் பலவீனமாக இருப்பதாக ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.. மெல்ல மெல்ல போதை மருந்து அல்லதுவிஷம் கொடுத்து ஜெயேந்திரரைக் கொன்று விடுவார்கள் என்று அச்சம் தெரிவித்து பக்தர்கள்பலர் தொலைபேசியில் என்னிடம் பேசினர். இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான பிரேம்குமார்,தான் கொண்டு வந்த பாலைக் குடிக்குமாறு ஜெயேந்திரரைக் கட்டாயப்படுத்தியுள்ளார். அந்தப் பாலில் அவர் போதை மாத்திரை கலந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பிரேம்குமார் மிகவும் ஆபத்தானவர். இரு வழக்குகளில் அவர் தண்டிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன் ஒரு வழக்கில் பொய்ச் சாட்சி சொல்லுமாறு பொலிஸ் காவலில் இருந்தவரைத் துன்புறுத்தியதாக அவர் மீது கூறப்பட்ட புகார் குறித்துவிசாரணை நடத்துமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஜெயேந்திரருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமல் தடுக்க குடியரசுத் தலைவர் உடனடியாகத் தலையிட வேண்டும் என வழக்கறிஞர் கிருஷ்ணமணி கேட்டுள்ளார்.

# பிரேசில் கால்பந்து வீரர் போட்டியின் போது மைதானத்தில் வீழ்ந்து மரணம்



களத்தில் அடிக்க முன்னேறும் கிறிஸ்டியானோ ஜூனியர்

பெங்களூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெடரேஷன் கோப்பைக் கால்பந்துப் போட்டியில்,டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் கோப்பையை வெல்லக் காரணமான பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ டெலிமா ஜூனியர் மைதானத்திலேயே உயிரிழந்தார்.

பெடரேஷன் கோப்பைக்கான இறுதிப் போட்டியில் கோவாவைச் சேர்ந்த டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் அணியும், கொல்கத்தாவைச் சேர்ந்த மோகன் பகான் அணியும் மோதின.

முடிவில் டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, கோப்பையைக் கைப்பற்றியது.

கோவா அணிக்காக ஆடிய பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ ஜுனியர் ஒவ்வொரு பாதியிலும் தலா ஒரு கோல் அடித்தார்.

முன்னதாக கோல் போட முயன்ற போது கிறிஸ்டியானோ மார்புமீது மோகன் பகான் கோல்கீப்பர் மோதினார்.

பின்னர் 78-ஆவது நிமிடத்தில் இவர் 2-ஆவது கோலை அடித்த உடன் மைதானத்திலேயே விழுந்து நிலை குலைந்தார்.

உடனே அருகிலுள்ள மருத்துவ



மனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் வழியிலேயே அவர் இறந்துவிட்டார் என மருத்துவமனை தலைமை மருத்துவர் தெரிவித்தார்.

# டேவிஸ் கிண்ணத்தை ஸ்பெயின் கைப்பற்றியது



ஸ்பெயின் செவிலியில் நடைபெற்ற டேவிஸ் கிண்ண ரெனிஸ் போட்டியில் அமெரிக்க வீரர் அன்டிரொடிக்கை வென்ற ஸ்பெயின் வீரர் காலோஸ் மோயா கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார். இது ஸ்பெயின் நாட்டுக்கு 2 ஆவது வெற்றியாகும். முன்னதாக 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. ரசிகர்களின் உற்சாகத்தினால் கடந்த வெள்ளியன்று ஒற்றையர் போட்டியில் நடேலும் மோயாவும் வென்றனர்.

அமெரிக்க இணை மைக்கும்பொப்பிரேனும் ஜுவின் காலோஸையும் டொம்மி றொபர்டோவை வென்று உற்சாகமாக இருந்தனர்.

ஆயினும் மோயாவை வெல்வதில் அவர்கள் தவறிவிட்டனர்.

# ஹொக்கி டெஸ்ட் போட்டித் தொடர் ஸ்பெயினிடம் ஜேர்மனி சுருண்டது



பாகிஸ்தானில் உள்ள லாகூரில் நடைபெறும் சாம்பியன் ஹொக்கிப் போட்டியில் ஜேர்மனியை 5-2 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் சுருட்டியது. நேற்று முன்தினம் நடந்த மற்றொரு போட்டியில் இந்தியாவை ஸ்பெயின் ஏற்கனவே 4-0 என்ற கோல் கணக்கில் வென்றது. அதே வேகத்தில் ஜேர்மனியின் பாதுகாப்பு அரணை ஸ்பெயின் வீரர்கள் தகர்த்தனர். இடைவேளைக்குப் பிறகு கிட்டத்தட்ட ஆட்ட மைதானத்தில் ஸ்பெயின் ஆட்டக்காரர்களின் ஆதிக்கமே நிலவியது.

ஆட்டம் முதலில் மந்தமாக நடந்துகொண்டிருந்தது. 20 ஆவது நிமிடத்தில் ஸ்பெயினின் ஆல்பர்ட் சாலா கோல் போட்டு ஆட்டத்தைச் சூடுபிடிக்க வைத்தார். ஆயினும் ஜேர்மனியர்களும் விடா முயற்சியுடன் விளையாடினர். ஸ்பெயின் முதல் கோல் போட்ட 5ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் புளோரியன் கெல்லர் முதல் கோல் போட்டார். இடைவேளை வரை ஜேர்மனியர்கள் கச்சிதமான தற்காப்பு ஆட்டம் ஆடினர்.




இடைவேளைக்குப் பிறகு ஜேர்மனியின் தற்காப்பு அரணைத் தகர்த்துக்கொண்டு ஸ்பெயின் அணி ஊடுருவல் செய்துவிளையாட ஆரம்பித்தது.அதனை ஜேர்மனியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. கடைசியில் 5-2 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் வென்று ஒலிம்பிக் தோல்விக்கு வஞ்சம் தீர்த்துக்கொண்டது. இத்துடன் இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்றதன் மூலமாக ஸ்பெயின் 6 புள்ளிகள் பெற்றுள்ளது.

உலக லைற் வெயிட் குத்துச் சண்டை சம்பியன் பட்டத்துக்காக மோதும் மெக்சிக்கோ வீரர் ஜோஜ் லூயிஸ் ஹாஸ்டில்லோ, புளோரிடாவைச் சேர்ந்த ஜோயல் ஹாசாமேயரை வெற்றி கொண்டார். மொத்தம் 12 சுற்றுக்கள் கொண்ட இப்போட்டி அமெரிக்காவில் லாஸ் வேஹாசில் சனிக் கிழமை நடைபெற்றது.




# முரளிதரனின் பந்து வீச்சு சட்ட பூர்வமானது டொன் பிரட்மன் பிரகடனப்படுத்தியதாகத் தகவல்



புகழ்பூத்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் டொன் பிரட்மன் இலங்கையின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் பந்து வீச்சுப் பாணி சட்ட பூர்வமானது என பிரகடனப்படுத்தியதாக இங்கிலாந்து பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பாக பிரட்மன் முரளி குறித்து பெரிதும் பாராட்டுதலுக்கு உரிய வகையில் கருத்துக்களை கூறியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் தோன்றிய துடுப்பாட்ட வீரர்களில் மிகச்சிறந்தவராகக் கருதப்படும் டொன் பிரட்மன் முரளிகுறித்து தனது வெளியீட்டாளர் தோம்சனிடம் பிரத்தியேகமாக இந்தத் தகவல்களைக் கூறியிருந்தார்.

இந்தத் தகவல்கள் தற்போது இங்கிலாந்தின் பத்திரிகை ஒன்றில் வெளிவந்துள்ளது.

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பின்னர் தோன்றிய சுழல்பந்து வீச்சாளர்களில் மிகவும் உயர்வான ஒழுக்கத்தை வெளிப்படுத்துகின்ற வீரராக முரளி திகழ்வதாகவும் டொன் பிரட்மன் கூறியிருந்ததாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டடுள்ளது.

# சிம்பாப்வே கிரிக்கெட் அணி டெஸ்ட் அந்தஸ்துக்குரிய அணி அல்ல வோன்



சிம்பாப்வே கிரிக்கெட் அணி டெஸ்ட் அந்தஸ்த்து பெறக்கூடிய அணியாகதான் கருதவில்லை என்று இங்கிலாந்து கிரிக்கட் அணித்தலைவர் மைக்கல் வோன் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டுடன் 4 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 4-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியதும் அவரின் கருத்துப் பற்றி பி.பி.சி வினாவியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.சிம்பாப்வே பலமற்றுக் காணப்பட்டதாலேயே அதன் டெஸ்ட் அந்தஸ்துப் பறிக்கப்பட்டதாக கூறிய அவர் முன்னைய வீரர்களான ஹீத் ஸ்ரிக் போன்றோர் பங்கு பற்றாமை தனக்குக் கவலையளிப்பதாகக் கூறினார். முன்னைய பிளவர் சகோதரர்கள், ஹித்ஸ்ரிக் ஸ்டு வர்ட் காலைல் போன்றோர் பங்கெடுத்திருப்பின் மகிழ்ச்சியாக இருந்திருக்கும் என்றும் தனது அணி ஒருநாள் போட்டிகளில் தரமான அணியாக வரவேண்டும் என்றும் அந்த பலத்தோடு தென்னாபிரிக்க அணியை 7ஒருநாள் போட்டியிலும் டெஸ்ட்போட்டியிலும் சந்திக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். இவ்வாறிருக்க வோனின் கூற்றை மறுத்துள்ள ஈசான்மணி சிம்பாப்வே தென்னாபிரிக்காவுடன் இரு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# தொடரை முழுமையாகக் கைப்பற்றியது இங்கிலாந்து நான்காவது போட்டியில் 74 ஓட்டங்களால் வெற்றி




புலவாயோவில் நேற்று முன்தினம் நடந்த நான்காவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி சிம்பாப்வேயை 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. இதன்மூலம் இங்கிலாந்து அணித்தொடரை 4-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

பல்வேறு சர்ச்சைகளைக் கடந்து சிம்பாப்வே சென்ற இங்கிலாந்து அணி நான்கு ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்று முதல் மூன்று போட்டிகளில் வெற்றிபெற்ற இங்கிலாந்து தொடரை வென்றது.

இந்நிலையில் முக்கியத்துவம் இல்லாத நான்காவது போட்டி நேற்றுப் புலவாயோவில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தில் தேர்வு செய்தது. துவக்க ஆட்டக்காரர்களான பெல் 30, பிரயார் 35 ஓட்டங் களுக்கு ஆட்டமிழந்தனர். பின்னர் 3விக்கெட்டுக்கள அதி விரைவாக சரிந்தன. ஸ்ரோஸ் 17, பியட்டர்சன் 0, கோலிங்வூட் 5 ஓட்டங்களுக்கு வெளியேறினர். இதையடுத்து இங்கிலூந்து அணி 26.1 ஓவரில் 5விக்கெட் இழப்புக்கு 104 ஓட்டங்கள் எடுத்து தவித்தது.



இந்தச்சூழலில் அணித்தலைவர் மைக்கல்வோன், ஜெராய்ன்ட் ஜோன்ஸ் இணைந்து அணியை மீட்டனர். இவர்கள் ஆறாவது விக்கெட்டுக்கு 150 ஓட்டங்கள் சேர்த்து புதிய சாதனை படைத்தனர். வோன் 99 பந்துகளில் 90 ஓட்டங்களுடன் கடைசிவரை அவுட்டாகாமல் இருந்தார். ஜோன்ஸ் 80 ஓட்டங்கள் விளாசினார். இங்கிலாந்து அணி 50 ஓவரில் 6விக்கெட் இழப்புக்கு 261 ஓட்டங்கள் குவித்தது. இந்தக்கடின இலக்கை நோக்கி ஆடிய சிம்பாப்வே அணி வழக்கம்போல் திணறியது. டேரன்காப் பந்துவீச்சில் மட்சிகென்யரி 10, இப்ராகிம் 0 வெளியேறினர். மசகட்ஸ்கா அதிக பட்சமாக 6 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் சிம்பாப்வே அணி 48.4 ஓவரில் 187 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

# மெக்ராத் அணியில் இணைப்பு கஸ்பரோவிச் நீக்கம்



நியூலாந்து கிரிகெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. 3 ஒருநாள் போட்டி தொடரில் மெல்போனில் நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான முதல் ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. 2ஆவது போட்டி வரும் 8ஆம் திகதி சிட்னியில் நடக்கிறது.

இந்தப்போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் கஸ்பரோவிச் நீக்கப்பட்டு உள்ளார். நேற்று முன்தினம் ஆட்டத்தில் அவரது மோசமான பந்து வீச்சு தோல்விக்குக் காரணமாக இருந்தது. 3 ஓவரில் நியூசிலாந்து வெற்றிக்கு 32 ஓட்டங்கள் தேவைப்பட்டது. கஸ்பரோவிச் வீசிய ஒரு ஓவரில் 22ஓட்டங்களை கொடுத்தார். இதனால் கடைசி 2 ஓவரில் 10 ஓட்டங்கள் தேவை என்ற எளிதான இலக்கை நியூசிலாந்து எடுத்தது. இதனால் அணியில் இருந்து கஸ்பரோவிச் நீக்கப்பட்டார். முதல் போட்டியில் விளையாடாத மெக்ராத் 2ஆவது போட்டிக்கு சேர்க்கப்பட்டு உள்ளார்.

## சிந்தனைக்கு



தமிழ்-சிங்களப் பாட்டாளிகள் மத்தியில் வர்க்க ஒருமைப்பாடு ஏற்படுவதனால், தமிழரின் தன்னாட்சி உரிமையை சிங்களத் தொழிலாள வர்க்கம் அங்கீகரிக்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 07-12-2004
தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@eezhanatham.com


## யார் கையில் அரசாங்கம்?

நோர்வே அரசின் மீது ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி எழுதிய கடிதம், சமாதான முயற்சியில நோர்வேயின் பங்கு பணி பற்றிய கேள்வியை எழுப்பியிருந்தது. அதாவது, நோர்வே அரசு தொடர்ந்தும் சமாதான ஏற்பாட்டாளராக செயற படுவதா? இல்லையா? என்ற கேள்வியை அது எழுப்புவதாக இருந்தது-

ஏனெனில், நோர்வே அரசு விடுதலைப்புலிகளுக்குச் சார்பான நிலைப்பாட்டை மேற்கொள்வதாகவும், நோர்வே அரசின் சமாதானத்திற்கான பங்கு பணி தேவையற்றது எனவும் ரில்வின் சில்வா தனது கடிதத்தில் எழுதியிருந்தார். ஆனால், ரில்வின் சில்வாவின் கடிதத்தைத் தொடர்ந்து நோர்வே மேற்கொண்ட இராஜக முயற்சியானது சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவிப்பதாகியது.

அதாவது, நோர்வே அரசு ஏற்பாட்டாளர்கள் என்ற ரீதியில் தொடர்ந்து செயற்படுவதா? அன்றி அப்பாத்திரத்தில் இருந்து விலகிக் கொள்வதா? என்ற கேள்விக்குச் சனாதிபதி சந்திரிகா பதில் அளிக்க வேண்டியவரவார். இது சனாதிபதி சந்திரிகாவிற்கு பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும் ஒன்றாகியது எனில் மிகையாகாது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் முனைப்புடன் செயற்படாது போனாலும், சமாதான முயற்சிகள் தமது தரப்பால் குழப்பத்திற்கு உள்ளாக்கியது என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. ஏனெனில், யுத்தத்தினால் ஏற்படப்போகும் சகல பாதிப்புக்களுக்குமான பொறுப்பை அவர் ஏற்பதற்குத் தயாராக இல்லை.

அது மாத்திரமல்ல, தற்போது சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெறாது போனாலும், நோர்வேயைச் சமாதான முயற்சிகளை ஈடுபடுமாறு கோரியதற்கு, தற்பொது அமைதி நிலை தொடர்வதற்கும் தானே காரணம் எனச் சனாதிபதி சந்திரிகா பெருமை பேசிக் கொள்வதுண்டு. இது ஒருபுறம் இருக்க,

இலங்கையில், யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படுதல் வேண்டும் எனவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும், சர்வதேச நாடுகள் அக்கறை கொண்டுள்ளன. இந்நிலையில் அரசாங்கம் சமாதான முயற்சிகளை முறித்துக் கொள்வது போன்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்குமானால் அது பல வகையிலும் சிறிலங்கா அரசாங்கத்தைப் பாதிப்பிற்கு உள்ளாக்கத்தக்கதாகும்.

இந்நிலையில்தான், ரில்வின் சில்வாவின் கடிதத்தைத் தொடர்ந்து நோர்வே சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தமது பங்கு பணி என்ன? என்ற கேள்வியை எழுப்பியதும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெரும் குழப்பத்திற்கு உள்ளானார். இதேசமயம் கடும் சீற்றத்திற்கு உள்ளானதாகவும் கூறப்படுகின்றது. இவற்றை ஊர்ஜிதப்படுத்துமாப் போன்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

குறிப்பாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தரப்பிலிருந்து ஜே.வி.பியுடன் நெருக்கமான உறவையும், ஜே.வி.பி.-சுதந்திரக் கட்சி இடையிலான உடன்பாட்டில் முக்கிய பங்கு வகித்தவருமான அமைச்சர் மங்கள சமரவீரவை அழைத்து சனாதிபதி தமது சீற்றத்தை வெளிப்படுத்தியதுடன், வெளிவிகார அமைச்சர் கதிர்காமருக்கு ரில்வின் சில்வாவின் கருத்து அரசாங்கத்தின் கருத்தல்ல என நோர்வே அரசிற்குத் தெரியப்படுத்துமாறும் பணித்திருந்தார்.

இதைத்தொடர்ந்து நோர்வே அரசிற்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ரில்வின் சில்வாவின் கருத்துக்கள் அரசாங்கத்தின் கருத்துக்கள் அல்ல எனத் தெரிவிக்கும்போது கூறிய விடயங்கள் ரில்வின் சில்வாவையோ அன்றி ஜே.வி.பியையோ சிறுமைப்படுத்தும் அளவிற்கு இருந்தமையைக் கொண்டே சனாதிபதி சந்திரிகாவின் கோபம் வெளிப்பட்டிருந்ததெனலாம்.

அதாவது, ரில்வின் சில்வா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் ஒரு அமைச்சரோ, அங்கத்தவரோ அல்ல எனத் தெரிவித்த அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அது பொருட்படுத்தத்தக்க கடிதம் ஒன்றல்ல எனவும் தெரிவித்திருந்தார். அதாவது, தமது கூட்டணிக் கட்சியின் பொதுச் செயலாளர் பொருட்படுத்தத்தக்கவர் அல்ல என்பது மட்டுமல்ல, ரில்வின் சில்வாவை எவ்வளவு சிறுமைப்படுத்த முடியுமோ அந்தளவிற்குச் சிறுமைப்படுத்தும் அளவில் லக்ஸ்மன் கதிர்காமரின் கூற்றுக்கள் உள்ளன.

இந்நிலையில், எழும் முக்கியமான கேள்வி சிறிலங்கா அரசாங்கம் யார் கையில் உள்ளது என்பதே. அதாவது, அரசாங்கம் தமது கையிலேயே உள்ளதாகக் கூறும் சுதந்திரக் கட்சியிடமா? அல்லது தாம் கூறுவதைச் செய்யாதுவிட்டால் ஆட்சியைக் கவிழ்ப்போம் என அரசாங்கத்தை எச்சரித்துவரும் அமைச்சரவையில் பங்காளியாகவுள்ள ஜே.வி.பியினரிடமா?

ஏனெனில், ஜே.வி.பி. இன்றி இன்றைய அரசாங்கம் என்பது சாத்தியமற்றதொன்று. ஆனால், அக்கட்சியின் செயலாளர் கூறுவது பொருட்படுத்தத்தக்கதல்ல எனில், ரில்வின் சில்வா ஜே.வி.பியினாலும் பொருட்படுத்தத் தேவையற்றவராகவே இருக்க முடியும். அவ்வாறு இல்லாதுவிடில், அரசாங்கம் கூறுவது போன்று ரில்வின் சில்வாவின் கடிதம் எவ்வாறு பொருட்படுத்தத் தேவையற்றதாகவே இருக்க முடியும். ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் எப்பொழுதுமே மக்களைக் குழப்பத்திற்குள்ளாக்குவதில் அக்கறை கொண்டவர்களாகவே இருப்பதுண்டு. ஏனெனில், அவ்வாறு இல்லாவிடில், மக்கள் இவர்களை விரட்டியடித்துவிடுவார்கள்.

# பாரம்பரிய விவசாயத்தை திட்டமிட்டு பன்னாட்டு நிறுவனங்கள் தடுக்கின்றன

### — ஊவா மாகாணமுதல்மைச்சர். விஜித் விஜயமுனி சொய்சா

வரலாற்று ரீதியாக மேற்கொள்ளப்படும் பாரம்பரிய விவசாயத்தை ஆக்கிரமிக்க முடியாத பன்னாட்டு நிறுவனங்கள் திட்டமிட்ட முறையில் காடழிப்புச் சட்டங்களை உருவாக்கி அவற்றை தடுத்து நிறுத்த முனைவதாக ஊவா மாகாண முதலமைச்சர் விஜித் விஜய்முனிசொய்சா குற்றம் சாட்டியுள்ளார். ஒருகாலத்தில் இலங்கையின் விவசாயத்தில் மிகமுக்கிய இடத்தை வகித்த ஊவா மாகாணத்தின் விவசாயக் களஞ்சியமாக விளங்கிய மொனராகலையில் தற்போது சேனைப் பயிற்செய்கை செய்யமுடியாது சிறிய காடுகளை அழிப்பதை தடுக்கும் சட்டங்கள் கொண்டுவரப் பட்டுள்ளன. இதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்கள் படைத்தரப்பினர் காவல் துறையினா் பெரும் வியாபாரிகள் என பலதரப்பட்டவர்கள் காடுகளை அழிப்பதை இந்த பன்னாட்டு நிறுவனங்களும் ஆட்சியில் உள்ள உயர் தலைவர்களும் கண்டு கொள்வதில்லை எனச்சுட்டிக் காட்டியுள்ளார். (32)

### ஹிந்தி நடிகர்,நடிகைகள் பங்குபற்றும்

# களியாட்ட நிகழ்ச்சியை தடைசெய்யக் கோரி தேசிய பிக்குகள் சங்கம் ஆர்ப்பாட்டம்

கொழும்பில் நடைபெறவுள்ள ஹிந்தி திரையுலக நட்சத்திரங்கள் பங்குபற்றும் நட்சத்திரக் களியாட்ட நிகழ்ச்சியைத் தடை செய்ய வேண்டும் என்று கோரி தேசிய பிக்குகள் சங்கம் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

ஹிந்தித் திரையுலகின் முன்னணி திரை நட்சத்திரங்களில் ஒருவரான ஷாருக்ஹான் தலைமையில் ப்ரீத்தி ஸிந்தா, ஸபி அலி ஹான், பரியங்கா சோப்ரா, ஜாவிட் ஹான், ஷெரினா ஜெட்லி ஆகியோர் உட்பட நடனக் குழுவினர் பங்குபற்றும் இந்த மாபெரும் கலை நிகழ்ச்சி கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந் நிகழ்ச்சிக்கான நுழைவுச்சீட்டு ஒன்றின் விலை 10 ஆயிரம் ரூபா வரை உள்ளது. நிகழ்ச்சியைக் கண்டுகளிக்கவென அண்டை நாடுகளான மாலைதீவு, சிங்கப்பூர் மற்றும் பல நாடுகளிலிருந்து கூட ரசிகர்கள் நுழைவுச் சீட்டுக்களை முற்பதிவு செய்துள்ளனர். இந் நிலையில் பிக்குகளின் இந்த எதிர்ப்பு விழா ஏற்பாட்டாளர்களை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்பு குறித்து தெரிவிக்கையில் - "கலை நிகழ்ச்சி ஏற்பாடாகியுள்ள அன்றைய தினம் மறைந்த வணக்கத்துக்குரிய கங்கொடவில சோம தேரரின் முதலாவது ஆண்டு நினைவு தினம். அன்றைய தினம் இப்படியான களியாட்ட நிகழ்ச்சியை அனுமதிக்க முடியாது. தேரர் மறைந்த தினம் அன்று ஏற்பாடாகியுள்ள இக்கலை நிகழ்வு ஒரு சதி முயற்சியா என்றும் நாம் சந்தேகப்படுகிறோம். இவ்விழாவை இடம்பெற விடாது அமைதியான முறையில் நாம் எமது ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்துவோம்" என்று தெரிவித்தனர்.

# ஐ.தே.க.விலிருந்து விலகியிருப்போரை இணைத்துக் கொள்ள கட்சி நடவழிக்கை

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து விலகியிருக்கும் நபர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் இடம் பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கும் போது பல்வேறு கருத்து முரண்பாடுகள் காரணமாகவும் வேறுபல காரணங்களினாலும் கட்சியை விட்டு விலகிச் சென்ற பல உறுப்பினர்கள் இருப்பதாகவும் எதிர்வரும் சனாதிபதி தேர்தலை வெல்வதற்கு அவ்வகையான பிளவுகள் ஒருதடையாக இருக்கும் எனவும் கூறினார். பிரிந்திருக்கும் அனைவரையும் இணைத்துக் கொள்வது கட்சிக்கு பலத்தைசோப்பதாக அமையும் எனவும் தெரிவித்தார் (32)

# நாட்டின் பணக்காரர்களை மையப்படுத்தியே ஐ.தே.கட்சி வரவு -செலவுத்திட்டம் தயாரித்தது

### நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

நாட்டின் 20 வீதமானவர்களைக் கருத்தில் எடுத்து பணக்காரர்களை மட்டுமே மையப்படுத்தித் தயாரிக்கப்பட்ட வரவு -செலவுத் திட்டமே கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டமாகும் என நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் வெலிமடையில் நடைபெற்ற பால் உற்பத்திக் கிராம ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மக் களுடைய நலன்சார் அரசாங்கமான தமது ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசாங்கத்தால் அத்தகைய வரவு-செலவுத் திட்டங்களைத் தயாரிக்க முடியாது எனத் தெரி வித்த அவர் நாட்டில் வாழும் அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலான வரவு-செலவுத்திட்டத்தையே தாம் முன்வைத்திருப்பதாகவும் தெரிவித்தார் இப்படியான வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது அதிக வாய்ப்புப் பெற்ற 20வீதமானவா்கள் பாதிக்கப்படலாம் எனவும், ஆனால் அதற்காக மிகுதி 80 வீதமான பெரும்பான்மை மக்களை இன்னலுக்குட்படுத்த முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

### -நீதிமன்ற அவமதிப்பு வழக்கு-

# எஸ்.பி.திசாநாயக்க மீதான வழக்குத் தீர்ப்பு இன்று

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க உச்சநீதி மன்றத்தை அவமதிப்புச் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தொடரப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது இந்த வழக்கிற்கான தீர்ப்பினை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா உள்ளிட்ட ஐந்து நீதி அரசர்கள் கொண்ட உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது முன்னாள அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி கபதூறுவாவில் நடைபெற்ற ஏர்பூட்டு விழாவில் ஆற்றிய உரை உச்சநீதிமன்றத்தை அவமதிப்புச்செய்வதாகக் கூறி உடவதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பேபிட்டிய குடும்பத்திற்கு சந்திரிகா 50 லட்சம் அன்பளிப்பு

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் குடும்பத்திற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐம்பது இலட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கவுள்ளார்.

சனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற இந்தநிதி கையளிப்பின் போது சனாதிபதி சந்திரிகா படுகொலை செய்யப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் மனைவியிடம் அந்த நிதிக்கான காசோலையை கையளித்தார்.

# கருணா-ஈ.என்.டி.எல்.எவ் கூட்டுக்கட்சி

# இந்திய கொள்கை வகுப்பாளர் அதிருப்தி

கருணா குழுவிற்கும் ஈ.என்.டி. எல்.எவ். அமைப்பினருக்கும் இடையே றோ அமைப்பின் மேற்பார்வையில் உருவாக்கப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி அமைப்புத் தொடர்பாக இந்தியாவின் பிராந்தியக் கொள்கை வகுப்பாளர்களிற்கும், சில இந்திய உளவுத்துறை அதிகாரிகளிற்குமிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக இணையத்தளச் செய்தியொன்று தெரிவிக்கிறது. இந்தியாவின் உளவுத்துறையான றோ அமைப்பின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கும் ஈ.என்.டி.எல்.எவ். உறுப்பினர்களை விடுதலைப்புலிகளின் அமைப்பில் இருந்து சுயநலத் தேவைகளுக்காகப் பிரிந்த உறுப்பினர்களுடன் இணைத்து கட்சி உருவாக்கியுள்ளமை இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளையும் ஆபத்தான கட்டத்திற்கு இட்டுச் செல்லுமென்று இந்தியப் பிராந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிராக ஈ.என்.டி. எல்.எவ். அமைப்பு உருவாக்கப்பட்டு அதில் பாரிய தோல்வியினை இந்திய அரச படைகள் சந்தித்தது. இதற்குப் புத்துயிரூட்டும் செயலாக முன்னை நாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுடன் உருவாக்கியுள்ளமை ஆபத்தை உருவாக்கலாம்.

இவர்கள் தமிழ்த்தேசிய உணர்வுடன் பலகாலம் போராடியவர்கள். எனவே இவர்களின் உளவியல் செயற்பாடுகளில் இந்திய பிராந்தியக் கொள்கைக்கு ஏற்ற விதத்தில் முழுமையான உளவியல் மாற்றத்தையும் பயன்பாடுகளையும் எதிர்பார்க்க முடியாது என்றும் இந்திய உளவுத்துறைக்குள்ளும் அவற்றின் செயற்பாடுகளிலும் விடுதலைப்புலிகளின் ஊடுருவல் இதன் மூலம் உருவாகலாம் என்றும் கொள்கை வகுப்பாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளதாகவும் இச்செய்தி மேலும் கூறுகிறது.

## மகேஸ்வரன்,ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

## பாராளுமன்றத்தில் வாதப்பிரதிவாதம்

பாராளுமன்ற கேள்வி நேரத்தில் வினா எழுப்புவது தொடர்பாக ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனுக்கும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்குமிடையே நேற்று வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

பண்டாரநாயக்க குடும்பத்தை அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து மகேஸ்வரன் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்கப் போவதில்லை என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்திருந்தார். இந்நிலையில் நேற்றுப் பாராளுமன்றத்தில் திமகேஸ்வரன் இலங்கை மின்சாரசபை தொடர்பாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்திடம் வாய்மூல வினாவிற்காக சமர்ப்பித்த கேள்விகளை இறுதி நேரத்தில் வாபஸ் பெற்றுக்கொண்டார்.

அரசாங்கத்தில் உள்ள நேர்மையான ஒரு அமைச்சரிடம் குறிப்பிட்ட வினாவை எழுப்பி அவருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்த தான் விரும்பவில்லை என மகேஸ்வரன் இதற்குக் காரணம் கூறினார்.

இதனை ஆட்சேபித்த ஆளும் கட்சி பிரதம அமைப்பாளர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே-"பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின் படி பதில் எதிர்பார்க்கும் கேள்விகளை வாபஸ் பெறமுடியாது"- என்றார்.

இந்த நேரத்தில் குறுக்கிட்ட மகேஸ்வரன் "நான் கேட்கும் கேள்விகளுக்கு தான் பதில் கூறப்போவதில்லை என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயினால் கூற முடியுமானால், அதுபோல் கேள்விகளைக் கேட்பதும் கேட்காமல் விடுவதும் என்னைப் பொறுத்தது" எனக் கூறினார்.

இதற்கிடையில், ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலியே ரத்ன தேரர் உரையாற்றுகையில்-

"மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலைச் சூத்திரதாரியான பெட்டை நவ்பரை காப்பாற்றுவதற்கு சில பொலிஸ் உயர் அதிகாரிகள் முயற்சிக்கிறார்கள்"- என்று குற்றம் சுமத்தினார்.

"அவரை இந்நாட்டைவிட்டு தப்பியோட வைப்பதற்கும் அந்த குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிகள் திட்டம் போடுகிறார்கள்" என்று குறிப்பிட்ட அவர், சிறைச்சாலையில் இந்த சந்தேக நபருக்கு சில வசதிகள் எற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

## டிரோன் பெர்னாண்டோ பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக டிரோன் பெர்னாண்டே நேற்று சனாதிபதி முன் பதவிப் பிரமாணம் செய்துள்ளார்.

முன்னர் ஆளுநராக இருந்த அசோக ஜெயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நிமிக்கப்பட்டதை அடுத்து டிரோன் பெர்னாண்டோ வடக்குகிழக்கு ஆளுநராக நிமிக்கப்பட்டார்.

### திருமலை மூதூர்...

லையில் நடைபெற்றது. திருமலை மாவட்டத் தமிழீழக் காவல்துறைக் கண்காணிப்பாளர் சிரஞ்சீவி அங்கு பிரசன்னமாகியிருந்தார். பின்னர் குற்றவியல் நீதியாளரின் பணிப்பின் பேரில் அச்சடலம் புதைக்கப்பட்டது.(25)

### இடைக்கால...

தீர்வொன்று காண்பதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால்தான் அவசர, மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாகக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

'தென்பகுதி மக்கள் பெற்றுள்ள அனைத்து உரிமைகளும் வடக்கு - கிழக்கு மக்களுக்கும் அவசியமானவை என்பதை தெற்கு மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

'பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்போது தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும்' என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### திருமலையில்...

மாபுரம் சந்தியில் தமிழர் ஒருவருக்கு சொந்தமான வீட்டிலும் இவ்வாறான ஒரு முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வரோதயநகர் கந்தையா வீதியில் காவல் அரண் ஒன்று தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு அண்மித்ததாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. திருகோணமலை பிரடறிக்கோட்டையில் இராணுவத்தின் பாரிய முகாம் ஒன்று உள்ளது. இதில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் இவ்வாறு ஒரு புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது பலத்த சந்தேகத்தையே ஏற்படுத்துவதாக அப்பகுதி மக்களும் ஆர்வலர்களும் கவலை வெளியிட்டுள்ளார்கள்.

### சண்டையை...

டார். சனாதிபதி பிரஸ்கரிடம் கேட்ட அதே கேள்வியைக் கேட்டார். அதற்குப் பதிலளித்த சூல்ஹெய்ம் பிரபாகரனின் உரையில் சூசகமாக என்ன கூறப்பட்டுள்ளது என்பதைக் கூறக்கூடிய ஒரே ஒரு பொறுப்பான நபர் "பிரபாகரன் தான். அதுபற்றி நாம் கருத்துக் கூற முடியாது என்று நினைக்கிறேன்"- என்றார்.

"நீங்கள் புலிகளுடன் தொடர்பு கொண்டு அதுபற்றி அறியத்தருவீர்களா?" என்றார் சனாதிபதி.

"அப்படியானால் இலங்கைக்கு வரமுன்னர் லண்டனுக்குச் சென்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து இதுபற்றிப் பேசுகிறேன். எனது வரையறைக்குட்பட்டு என்னால் இயன்றவரை முயன்று பார்க்கிறேன்"- என்றார் சூல்ஹெய்ம்.

இதேவேளை வடக்கு கிழக்கில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்துப்பேச கிளிநொச்சிக்குச் சென்ற தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் ஊடாகவும் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இந்நிலையில் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரை குறித்து அரசு ஒரு அறிக்கையை விடுத்த போதும் சனாதிபதியின் கருத்துக்களை நேரடியாகக் கேட்டறியவே சூல்ஹெய்ம் தற்போது இலங்கை வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# லண்டனில் பிரபல சட்டத்தரணிகள் நிறுவனம் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டது

பிரித்தானியாவின் இலண்டன் அரோவ் பகுதியில் அமைந்திருந்த பிரபல தமிழ் சட்டத்தரணிகள் நிறுவனம் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் பிரித்தானியப் பொலிசாரினால் முற்றுகையிடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளதால் 15000 ஈழத்தமிழ் உறவுகள் நிர்க்கதியாகியுள்ளனர் என்று தெரியவருகிறது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது மேற்படி சட்டத்தரணிகள் நிறுவனம் பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்களுக்குரிய தமிழ் சட்ட ஆலோசனைக்காக பிரித்தானிய அரசால் வழங்கப்படும் பணத்தைத் தவறாகக் கையாண்டதுடன் பல மில்லியன் பவுண்டுகளை வருமானமாக சட்டரீதியற்ற முறையில் திரட்டியதாகப் பொலிசார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேற்படி தமிழ் சட்டத்தரணிகள் நிறுவனத்தில் கடமையாற்றியவர்களில் ஒருவர் கொடுத்த இரகசியமான தகவலையடுத்தே இந்த நிறுவனம் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இ ந நிறுவனத்தில் சுமார் 6000 ஈழத்தமிழர்களின் அகதிகள் தொடர்பான கோவைகள் மட்டும் இருந்ததாகவும் சுமார் 10000 இற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களை வைத்திருந்ததாகவும் தெரியவருகின்றது.

## -கிளி.நகர்ப் பகுதி விற்பனை நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருட்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி டிப்போ வீதியிலுள்ள உணவுச்சாலைகள் மற்றும் பல் பொருள் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பெற்று வந்த காலாவதியான உணவுப் பொருட்கள்,பால்மா வகைகள் மற்றும் தகரமீன், வெளிநாட்டு குளிர்பானங்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

நேற்றுக் காலை கிளிநொச்சி சுகாதார திணைக்களத்தினரும் கரைச்சி பிரதேச சபையினரும் இணைந்து டிப்போ வீதியின் இரு மருங்கிலும் அமைந்துள்ள மேற்படி வியாபார நிலையங்களில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது காலாவதியான உணவுப் பொருட்களும் குளிர்பானங்கள் மற்றும் பழவகைகள் என்பன கைப்பற்றப்பெற்று அழிக்கப்பட்டதுடன் 4 வியாபார நிலைய உரிமையாளர்களிடம் கரைச்சி பிரதேச சபையினரால் தண்டம் விதிக்கப்பட்டது.

தொடர்ந்தும் சகல பகுதிகளிலுமுள்ள வியாபார நிலையங்களில் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதென கிளிநொச்சி சுகாதார திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## கட்சிதாவிய லோகிதபோகலாகம ஐ.தே.க.விலிருந்து நீக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு அண்மையில் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசிற்குத் தாவி அமைச்சுப்பதவி யேற்ற லோகித போகலாகமவின் கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்ய தீர்மானித்துள்ளது.

கட்சி யாப்பின்படி செயற்குழுவின் அனுமதியின்றி வேறு கட்சியின் அரசாங்கத்தில் அமைச்சர் பதவிவகிக்க முடியாதென ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் போகலாகமவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோகும் எனவும அவர் சுட்டிகாட்டியுள்ளார். தமது கட்சியின் யாப்பிற்கு அமைய ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு வேறு அரசியல் கட்சியில் பதவிக்காக இணைந்து கொள்ள முடியாது. இது தொடர்பாக கட்சியின் யாப்பில் மூன்று-நான்கு டி சரத்தின்கீழ் கட்சியின் செயற்குழுவின் முன் அனுமதி பெற வேண்டும்

இந்த வகையில் லோகித போகலாகமக் கட்சியின் செயற்குழுவின் முன் அனுமதியின்றி அரசாங்கத்தில் இணைந்துகொண்டதும் அரசாங்கப் பதவியைப் பொறுப்பேற்றதும் தமது கட்சி யாப்பின்படி உறுப்புரிமை இரத்ததானமாகக் கருதப்படும். இதனை நாங்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளோம் என்றார்.

### வடகிழக்கு...

இதேவேளை குறிப்பிட்ட பகுதிகளில் மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதால் சீருடைகளைச் சற்றுக் காலந் தாழ்த்தி அனுப்புமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### புதுக்குடியிருப்பில்...

கிடந்ததை அவதானித்ததும், உடன் புதுக்குடியிருப்பு காவல் பணிமனையில் முறைப்பாடு செய்தனர். இதனை அடுத்து காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். இதன் பின்னர் புதுக்குடியிருப்பு நீதிமன்ற குற்றவியல் நீதியாளர் பிரவுராஜ் என்பவர் சம்பவ இடத்திற்குச் சென்று சுருக்குமுறை விசாரணைகளை மேற்கொண்டனர். படுகாயமடைந்த சண்முகராசா மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (08)

### வல்வெட்டித்துறை...

கண்டதாகக் கூறப்படும் இரு சாட்சிகளும் இதேபோன்று அச்சுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நாளை புதன்கிழமை மேற்படி கொலைச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் பருத்தித்துறை நீதிமன்றில் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையிலேயே வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவொன்றே இவ்வாறான அச்சுறுத்தல்களை விடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. "மேற்படி கொலைச்சம்பவத்திற்கும் இராணுவத் திற்கும் எந்தவிதமான தொடர்புகளுமில்லையெனவும், விடுதலைப் புலிகளே இக்கொலைகளைச் செய்ததாக நீதிமன்றில் வாக்குமூலமளிக்குமாறு தாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக உயிரிழந்த இளைஞர்களது பெற்றோர் செய்துள்ள அம் முறைபாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே குறித்த கொலைச்சம்பவத்திற்கும், இராணுவத்திற்கும் எந்தவொரு தொடர்பு மில்லையெனவும், திட்டமிட்டு சிலரால் நம்மீது பழிபோடப்படுவதாகவும் தெரிவித்திருக்கும் கடிதமொன்றையும் யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உயிரிழந்த இளைஞர்களது குடும்பங்களிற்கு அனுப்பிவைத்துள்ளார். (27,33)

மனித உரிமைகள் NESOHR
வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம்
பெண் வன்முறைகளுக்கெதிராகவும்;
சிறுவர்களின் துஸ்பிரயோகங்களுக்கெதிராகவும் முழுமையாகச் செயற்படுகின்றது.
(சி-11002)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.